முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | ௨0–11–59 | வெள்ளி | ஓலை. ௮0

உலகெங்கும் 'குண்டுச்சட்டிக் குதிரைச் சவாரி'!



"தனித்திராவிடநாடு கேட்பது குண்டுச்சட்டிக்குள்ளே குதிரை ஓட்டுவது போல!", என்று சமீபத்தில் கனம் சுப்பராயன் விவரித்தார். (செய்தி)

★ ★ அஞ்சல் இலாக்கா புரிகின்ற அலங்கோலம் காணீர் :

ஆறே வீடுகளைக் கடந்துவர ஆறு நாட்களா?

● நாகரிகத்தின் வாடை பரவாத நாட்களில் பறந்து பறந்து பணிபுரிந்தனவாம், புறாக்கள். காலிலே கட்டப்பட்ட ஓலையுடன் சிறகடித்துச் சென்ற புறாக்களை பழைய காலக் கதைகளில் கண்டிருக்கிறோம். செய்திகளைத் தெரிவிக்க கருவிகள் கிடைக்காத காலமது — பழக்கப்பட்ட பறவைகள் இப்படிப் பயன்பட்டிருப்பது வியப்பல்ல!

● பின்னால், கடிதங்களைச் சுமந்து காற்றோடு போட்டியிட்டு ஓடினான் மனிதன். தோளிலே தொங்குகின்ற கடிதப்பை ஊசலாட-பாதுகாப்பிற்காகக் கையில் ஒரு கோலிருக்க—காடு மலைகளை, மேடு பள்ளங்களைக் கடந்து சென்றான் பாடுபடப் பிறந்தவன். காலமெல்லாம் ஓடிக் களைத்த அந்தத் தோழனை இன்றும் கிராமப்புறத்திலே சந்திக்கலாம், 'ரன்னர்' என்ற பெயரிலே!

—இப்படியெல்லாம் 'நடமாடும் அஞ்சலகங்கள்' விஞ்ஞானம் வளர்ச்சியுறாத காலத்திலே நம் நாட்டில் காணப்பட்டன. அன்றெல்லாம் கடிதங்கள் ஒழுங்காகத்தான் சென்றன. அதற்கெனக் குறித்திருந்த நேரத்தில் கிடைத்துக் கொண்டுதான் இருந்தன. ஆனால் இன்றோ...? 'அந்தப் பழைய காலமே திரும்பி வந்தால் பரவாயில்லையே' என்று எண்ணத்தக்க இழிநிலையைத்தான் காண முடிகிறது.

இத்தனைக்கும் இன்று நாடு முழுதும் பலலாயிரக் கணக்கான அஞ்சல நிலையங்கள் இருக்கின்றன; கோடிக் கணக்கான செந்நிறப் பெட்டிகள் நிற்கின்றன; கடிதங்களைச் சுமந்து செல்ல விமானங்கள் உண்டு; ரயில்கள் உண்டு; விநியோகம் செய்ய இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேறு!

இவை மட்டுமல்ல; அவைகளின் நிர்வாகத்தைக் கவனிக்க வெட்கக்கேடான இலாக்கா ஒன்றும் இருக்கிறது; அமைச்சர் வேறு உச்சியிலே!

ஆனாலும் என்ன பலன்? விழிகளை குளமாக்கும் விபரீதங்களை — நம்பினால் நாசத்தை அணைக்கத்தான் வேண்டும் என்ற நிலைமையை—நாம் சந்திக்கத்தான் வேண்டியிருக்கிறது! பெட்டியிலே போட்ட தபால் போகுமிடம் தெரிவதில்லை; கையிலே கிடைப்பதற்கோ காலம் சிறிது கடக்க வேண்டும்; நாம் காத்திருக்க வேண்டும்!

அஞ்சலிலே சேர்க்கப்பட்ட கடிதம் ஆண்டுகள் பத்து சென்ற பிறகுதான் உரிய இடத்தில் கிடைத்தது!

விலாசத்தவரைத் தேடியபோது அவர் மாண்டுபோய் மறைந்துவிட்டன நான்காண்டுகள்—என்ற தகவல் கிடைத்தது!

—இப்படிப்பட்ட பரபரப்பான செய்திகளை — உலகம் சுற்றிய 'முக்காலணா கார்டுகளை'ப்பற்றிய கதைகளை நாம் எப்போதாவதுதான் கேட்டறிகிறோம். அப்போதெல்லாம் 'இப்படி நடக்குமா' என்று நாம் வியப்படைகிறோம்.

ஆனால், இவைகள் அபூர்வ சம்பவங்கள் என்று நினைக்கிறீர்களா? இல்லை, இல்லை; இனிமேல் அன்றாட நிகழ்ச்சிகளாகவும் ஆகிவிடுமோ என்று அஞ்சத்தக்க நிலையில் கடமைப்பணி புரிந்து கொண்டிருக்கின்றன, அஞ்சலகங்கள்!

வேடிக்கையையும் வேதனையையும் தரத்தக்க செய்தி ஒன்றைக் கேளுங்கள்:

தபாலிலே போடப்பட்ட பத்திரிகை ஒன்று உரியவரிடம் சேர ஆறு நாட்கள் பிடித்திருக்கின்றன!

"அதில் என்ன, ஆச்சரியம்? அமெரிக்காவுக்கோ லண்டனுக்கோ, ஆப்பிரிக்கா காடுகளுக்கோ அனுப்பியிருந்தால் ஆகாதா ஆறுநாட்கள்?" என்று கேட்கலாம்!

ஆனால் இந்தப் பரிதாபத்திற்குரிய பத்திரிகை கடந்து வந்தது எவ்வளவு தூரம் தெரியுமா? பல ஊர்களைத் தாண்டவில்லை; பல மைல்களைக் கடக்கவில்லை!

கொடுமையிலும் கொடுமை—

ஆறு வீடுகளைத்தான் கடந்திருக்கிறது!

ஆமாம்; ஆறே வீடுகளைக் கடக்க ஆறுநாட்கள்!

உலகத்தின் எட்டாவது அதிசயமோ; அல்லது உளறல் வாதமோ—என்று திகைக்கிறீர்களா? இல்லை; நமது "முரசொலி"யைப் பொறுத்தவரையில் இது மிக மிகச் சாதாரண சம்பவம்!

கிழமைதோறும் 'முரசொலி' அலுவலகத்திலிருந்து அனுப்பப்படுகின்ற இதழ்கள், குறித்த காலத்தில் விற்பனையாளர்களுக்கோ—சந்தாதாரர்களுக்கோ சென்று அடைவது கிடையாது. நான்கு நாட்கள், ஐந்து நாட்கள், —சமயத்தில் ஒருவாரம் கடந்த பிறகுதான் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கிறது. சந்தாதாரர்கள் சலித்துக்கொண்டு எழுதிய கடிதங்கள் அலுவலகத்திலே குவிந்திருக்கின்றன; "விற்பனை செய்யத்தான் பத்திரிகை அனுப்புகிறீர்களா? அல்லது தோழர்களின் ஆர்வத்தை எடைபோட அனுப்புகிறீர்களா?" — என்று வெகுண்டு எழுதிய வெளியூர் விற்பனையாளர்களுக்கு சமாதானம் சொல்ல முடியாமல் பலமுறை தவித்திருக்கிறது அலுவலகம். கவனிக்கத் தெரிந்த சில தோழர்கள் பத்திரிகை அனுப்பப்பட்ட உறையைக் கிழித்துவைத்து அனுப்புவார்கள். அதிலே பத்திரிகை அலுவலகத்தில் சேர்க்கப்பட்ட தேதியையும், உரியவருக்கு சேர்ந்த தினத்தையும் பார்க்கிற நேரத்தில்தான் இடையே நிகழ்கின்ற கொடுமையைக் காண முடிகிறது!

கீழே இருக்கின்ற படத்தைப் பாருங்கள். ஆறு வீடுகளைப் கடக்க ஆறுநாள் யாத்திரை நடத்திய 'முரசொலி'யின் சோகக்கதையைச் சொல்லுகின்ற படம்! ஒரு பத்திரிகை உறையின் போட்டோ பிரதி இது!

அந்த உறைக்குள்ளிருந்த பத்திரிகை, 'முரசொலி' அலுவலத்திலிருந்து ஆயிரம்விளக்கு (கதீட்ரல், சென்னை—6) அஞ்சல் நிலையத்தில் சேர்க்கப்பட்ட தேதி...

29—10—59.

அதற்குக் கீழேயே இருக்கிற விலாசத்திற்கு அது போய்ச் சேர்ந்த தேதி என்று தபால் முத்திரை குறிப்பிடுவது....

4—11—59

அஞ்சல் நிலையங்கள் பணிபுரிகின்ற இலட்சணத்தில் அந்த பத்திரிகை போய்ச் சேரத் தேவைப்பட்ட நேரமோ...

6 நாட்கள்!

இந்த இடைக்காலத்தில் அந்த பத்திரிகை கடந்து வந்த ஆறுகள்—பறந்து வந்த தேசங்கள்—நகரங்கள் — தெருக்கள் எத்தனையோ என்றெல்லாம் திகைக்க வேண்டாம். அது தாண்டி வந்ததென்னவோ...

ஆறே வீடுகள்தான்!

குவிந்து வருகின்ற குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கிறதா—என்று அறிந்து பார்க்கவே 'முரசொலி' அலுவலக முகவரிக்கே பல இதழ்களை அனுப்பிப் பார்த்தோம். மற்றவர்கள் 'ஒருவாரம் கழித்தே இதழ் கிடைக்கிறது' என்று அலுத்துக் கொள்வதிலும், கண்டனங்கள் அனுப்புவதிலும் தவறே இல்லை என்பதையும் கண்டு கொண்டோம்!

இது இன்று நேற்று நடப்பதில்லை. 'முரசொலி'யின ஆரம்ப காலத்திலிருந்தே இத்தகைய பாதகங்கள் செய்யப்பட்டுத்தான் வருகின்றன. எத்தனை முறைதான் வாசக நண்பர்களுக்குச் சமாதானம் தரமுடியும்?

ஏன் இந்தக் கேடுகெட்ட நிலை?

முற்போக்கு எண்ணங்களைக் கொண்ட ஏடுகள் நடத்துவது மாபெரும் குற்றமா?

ஆளுங்கட்சிக்கு எதிர்முகாமிலே வீற்றிருப்பவர்கள், மக்கள் மன்றத்திலே தங்கள் கொள்கையைச் சொல்லுவதற்கு வன்மையுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்துகிறார்கள் என்ற பொறுமையா? அதனால் விளைந்த வெறுப்பா?

எதைச் சொல்வது இதற்குக் காரணமாக?

நகரத்துக்குள்ளேயே ஒரு பத்திரிகை, கூப்பிட்டால் காதில் விழக்கூடிய தூரத்திற்கு — ஆறு வீடுகளுக்கு அப்பால் ஆறு நாட்கள் கழித்துச் செல்கிறது என்றால், இடைப்பட்ட நாட்களிலே சென்னை நகரம் என்ன, பொங்கி எழுந்த கடலிலே அழுந்தி விட்டதா? புயலிலே சிக்குண்டுத் தவித்ததா? இருளிலே மூழ்கிக் கிடந்ததா? அல்லது ஆயிரம் விளக்கிலே இருந்த ஒரு விளக்கு கூட எரியாது அவிந்து போய் விட்டதா?

இடையிலே குறுக்கிட்ட ஒரு விடுமுறை நாளைத் தவிர, வேறு எந்த இடர்பாடும் இல்லை. ஆனாலும் இந்தக் கொடுமை நடந்திருக்கிறதென்றால், அதற்குப் பின்னாலே மறைந்து கிடக்கிற உண்மைக்கு என்ன பெயரிட்டு அழைப்பது?

சதி என்பதா?

பழி வாங்கும் தன்மை என்பதா?

[தொடர்ச்சி பக்கம்—11]



நிர்வாக இலட்சணம் காட்டும் முகவரியும், முத்திரைகளும்!

வெள்ளி 20—11—59 சென்னை

பசியும், பற்றும்!

"கள்ளமார்க்கெட்காரர்களையும், பதுக்கி வைத்து லாபம் பெருக்கும் பகற் கொள்ளைக்காரர்களையும் கழுவிலேற்றுவேன்!"

—மது மயக்கத்திலே புலம்புகின்றவனின் நிலையில் இப்படிச் சொன்னார், இந்த நாட்டை ஆளுகின்ற பேறுபடைத்த பண்டித நேரு, ஒருநாள். பதவி மயக்கம் உதிர்த்த இந்தச் சொற்கள், தேனாக இனித்தது, 'இனியாவது வாழப்போகிறோம்' என்ற நப்பாசை கொண்ட ஏழைக் குடியினருக்கு!

ஆனால் நிலைமை எப்படியாயிற்று? பகற்கொள்ளைக்காரர்களின் பிணம் சாயவில்லை; அவர்களின் பணப்பெட்டிக்குள்ளே சரணடைந்துவிட்டது ஆட்சி. ஆகவே வறுமையின் இரும்புப் பிடியிலே சிக்கிவிட்டது, நடுத்தர வர்க்கம்!

ஏழை துடித்தான்; உழைப்பிலே கிடைத்த ஊதியத்திற்கு உணவு கிடைக்கவில்லை. அவன் கையிலே கிட்டாத அளவில்—விண்ணை நோக்கி விரைந்து செல்கின்றன, விலைவாசிகள்!

1936—ல் படி இரண்டரை அணாவாக இருந்த அரிசியின் விலை, **1956**—ல் பத்தணாவாக உயர்ந்து, **1959**—ல் ஒரு ரூபாயும் இரண்டணாவும் என்கிற விபரீதமான நிலைமைக்குச் சென்றுவிட்டது! அரிசியின் கதை மட்டுமல்ல; அன்றாடத் தேவைக்கான பொருட்களின் விலை அனைத்துமே சந்திரமண்டலப் பயணம் நடத்துகின்ற 'ராக்கெட்'டின் வேகத்திலே ஏழையின் கண்ணுக்கு எட்டாத வெகுதூரத்திற்குச் சென்றுவிட்டது.

தமிழகத்திலா—தலையாட்டி வளத்தின் பெருமை காட்டும் தங்க நிற நெற்கதிர்கள் குலுங்கும் மண்ணிலே — காவிரியும் வைகையும் பாய்ந்து காணுமிடமெல்லாம் இயற்கைத்தாய் சிரிக்கும் பூமியிலே—இன்று காணுகின்ற நிலை என்ன? வறுமை—வாட்டம்! ஏனென்றால், இங்கே வரலாறு கண்டிராத விலையேற்றம்!

இத்தனைக்கும் இங்கே பருவ மழை பாழாகவில்லை; இயற்கை துரோகம் செய்யவில்லை! இருந்தாலும் ஏன் இந்த விலையேற்றம்? அரிசிக் கடைகளின் வெளியிலே வெய்யலுக்கும் மழைக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு பெருங்கூட்டம் நிற்பானேன்? கடைத்தெருவிலே கிடைக்காத பொருளைத் தேடி பெரும்படை அலைவானேன்? விளைவு அதிகமாம்--சர்க்காரே சொல்கிறது; ஆனாலும் விலைகள் உயர்வானேன்? இந்தக் கேள்விகளுக்கு விடை கேட்டது சென்னையிலே கூடிய சர்வ கட்சிக் குழு. மனிதன் உயிர் வாழும் அடிப்படைப் பிரசினை இது; இங்கே கட்சி பேதத்திற்கு இடமில்லை; கொள்கைக் குழப்பத்திற்கு வழியில்லை; எனவேதான் ஆளுகின்றவர்களை நோக்கி 'ஏன் இந்த இழிநிலை வளர்ந்தது' என்ற வேண்டுகோள் பறந்தது, இந்நாட்டு மக்களின் சார்பிலே!

வழக்கம்போல் கோட்டைவாசிகளிடமிருந்து சரியான பதில் கிடைக்கவில்லை; தெளிவற்ற கிண்டலும், கேலியும் புறப்படத்தான் செய்தன.

"புளியின் விலை ஏறிவிட்டது, புளிய மரங்கள் பயிர் செய்யாத காரணத்தால்" என்றார் முதல்வர் காமராசர். "எனக்கும்தான் புரியவில்லை; என்ன காரணம்?" என்று எதிர்க்கேள்வி போட்டார் பக்தவத்சலனார். மேட்டிலே வாசம் செய்கின்ற அவர்களுக்கு சமுதாயத்தின் அடிதளத்திலே மிதிபட்டுக் கிடக்கின்றவர்களின சோகக் கூக்குரல்—சாக்கடைப் பக்கத்திலே புரண்டு கொண்டிருப்போரின் வேதனைப் புலம்பல்—பொழுதுபோக்க நல்லதோர் விளையாட்டுதான்; வேடிக்கைதான்; விலா நோக சிரிப்பூட்டும் நிகழ்ச்சிதான்! அதனால்தான் அவர்களது களிப்புக்கு இடையிலே கண்ணீர்விடப் பிறந்தோரின் கண்டனக் குரல் இந்த நேரத்தில் தமிழகமெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

மக்களை வாட்டி வதைக்கின்ற இந்த உணவுப் பிரச்னையைத் தீர்க்க மாநில அரசோ—மத்திய அரசோ தவறிவிட்டது. அந்த மகத்தான குற்றத்தை—கையாலாகாத் தன்மையை—கண்ணீருக்கும் கதறலுக்கும் மதிப்பளிக்காத துரோகத்தைக் கண்டிக்கத்தான் தமிழகத்து அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து போராடுகின்றன. இத்திங்கள் **15**—ம் நாள் முதல் **22**—ம் நாள் வரை விலைவாசிக் குறைப்பு வாரம் கொண்டாடுகின்றன. தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சந்து பொந்தெல்லாம் அரசாங்கத்தின் சதியை அம்பலப்படுத்தி 'ஆவன செய்திடுவீர்! அல்லது சாகின்ற மக்களின் கணக்கெடுத்திடுவீர்!' என்று அறைகூவல் விடுக்கின்றன. ஊழல் மிகுந்தோருக்கு எதிராக ஊர்வலங்கள்; வாட்டம் போக்கிட வகையற்றோருக்கு எதிர்ப்புக் கூட்டங்கள்—எண்ணிக்கையற்று நடைபெறுகின்றன இக்கிழமை!

புள்ளிவிபரத்தால் ஏழைகளின் வயிற்றிலே கொள்ளிக் கட்டைகளைச் சொருகுகிறவர்களுக்கு அவர்களின் கணக்கையே காணிக்கையாக்குகிறோம். **1958—59** -ம் நடப்பு ஆண்டில் இந்திய உபகண்டத்திலே ஏழு கோடியே முப்பது இலட்சம் டன் உணவு உற்பத்தியாகி இருப்பதாக மத்திய அரசாங்கச் செய்தி கூறுகிறது. எந்த ஆண்டிலும் இல்லாத அதிக விளைச்சல்தான் இது! இந்த நாட்டிலே பிறந்துவிட்ட பரிதாபத்துக்குரிய ஒரு உயிருக்கு ஒவ்வொரு நாளைக்கும் சராசரி உணவு **16** அவுன்ஸ் ஆவதாக வைத்துக் கொள்வோம். **40** கோடி மக்களைக் கொண்ட இந்த நாட்டிற்கு இவ்வாண்டு விளைச்சல் மிக அதிகமானதாகும்! அத்தனை பேரும் சாப்பிட்டால்கூட மிகுதியாகத்தான் நிற்கும். அதாவது, **44** கோடி **80** இலட்சம் பேருக்குப் போதுமான உணவாகும் இது. தேவைக்குப் போக மிகுதியாகவே கிடங்குகளில் உணவு இருந்தாக வேண்டும்!

ஆனால், பற்றாக்குறை தாண்டவமாடுகிறதே; ஏன்? அதன் காரணமாக விலைகளும் விஷம்போல் ஏறுகிறதே; ஏன்? விளைந்த உற்பத்தியிலே பெரும்பகுதி எங்கே போயிற்று?

வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்களா என்றால் இல்லை; இங்கேதான் ஒரு பேருண்மை புலப்படுகிறது; உற்பத்தியிலே ஒரு பகுதி யாருடைய கண்ணுக்கும் தெரியாமல் மறைந்து விடுகிறது! பதுக்கிப் பணம் சேர்க்கும் லாப வேட்டைக்காரர்களின் இரகசியக் கிடங்குகளிலே முடங்கிக் கொண்டு விடுகிறது!

அவர்களைப் பிடித்துக் கூண்டிலே நிறுத்த வேண்டிய சர்க்கார் வேண்டுமென்றே தவறுகிறது; பெரும் பணக்காரர்களின் கோபத்திற்கு இலக்காகக்கூடாதே என்று விட்டுக்கொடுக்கிறது!

உற்பத்தியிலே பெரும்பகுதியை அரசாங்கமே கொள்முதல் செய்யப்போவதாக சென்னை அரசு குறிப்பிட்டது முன்பு. இந்த ஆண்டு இரண்டு லட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்யப் போவதாக சென்னையின் உணவு அமைச்சரே குறிப்பிட்டார். ஆனால் ஒரு லட்சம் டன் அரிசிதான் சர்க்காரின் கண்களுக்குக் காட்டப்பட்டது! ஆகவேதான் அவர்களது கவனத்தையும் கடந்து விலை ஏறி விட்டது. அரிசி மூட்டை ஒன்றின் அதிக விலை **34** ரூபாய் என்று சர்க்கார் கணித்தது; விலை நிலவரம் சொல்லும் வானொலியும் இன்றுகூட அப்படித்தான் சொல்லுகிறது; ஆனால் விற்பனையாகின்ற விலையோ **49** ரூபாய்!

சர்க்காரின் உத்தரவுகள் உதாசீனப்படுத்தப்படுகின்றன. இனியும் ஆளும் திறனற்றவர்கள் அரியணையில் வீற்றிருப்பானேன்?

"கிளர்ச்சியால் விலை உயர்வைத் தடுத்து விட முடியாது!" என்று இன்றைய சர்வகட்சி கிளர்ச்சிக்கு எச்சரிக்கை தந்திருக்கிறார் சென்னையின் முதல்வர் காமராசர்.

வேறு வழியின்றி நடக்கிறது இந்தக் கிளர்ச்சி! ஏழையின் அழுத கண்ணீருக்கு மதிப்பில்லை; மந்திரிமார் நெஞ்சத்திலே இரக்கத்திற்கு இடமில்லை! அந்த அழுத கண்ணீரே கூரிய வாளாக மாற வேண்டும் என்று அவர் கருதுகிறாரா? அந்தக் கொடிய நிலையை ஆரத்தி எடுத்து வரவேற்ற அரசுகள் எல்லாம் குப்பை மேடாக மாறியிருக்கின்றன. நம்மை ஆளுவோர் அதை உணரட்டும்; ஏழை இனத்தின் ஏக்கக் குரலுக்கு மதிப்பளிக்கட்டும்!

'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பார்கள்; இது பழமொழி! இன்றைய நிலையில் 'பசிவந்திடப் பற்றும் பறந்துபோகும்'—என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஆட்சியின்மேல் இருக்கின்ற பற்று பறந்துவிட்டது இன்று; இதனால் நாட்டின்மேல் இருக்கின்ற பற்றும் பறந்து, இறுதியிலே உயிரின்மேல் இருக்கின்ற பற்றும் பறப்பதற்கு முன், ஆட்சியினர் ஆவன செய்வார்கள் என்று நம்புகிறோம்.

மனிதனின் கதை



பி.சி. கணேசன்

58.

அன்புள்ள மாதவி,

மன்னனின் சர்வாதிகாரத்தை எதிர்த்து மாபெரும் புரட்சியொன்று நடந்து முடிந்தபின், மீண்டும் சர்வாதிகார ஆட்சிதான் பிரான்சில் தோன்றியது என்பதை அறியும்போது நீ ஆச்சரியமடைவாய். ஆனால் உண்மையில் அப்படித்தான் நடந்தது. மன்னனின் மகன் மன்னனாகி முடி சூடி மனம்போனபடி ஆட்சி செய்யும் நிலை மாறியது. சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவனும் ஆற்றலிருந்தால் அரச பாரத்தைத் தாங்கும் அந்தஸ்தைப் பெறலாம் என்ற நிலை பிறந்தது. அப்படி சாதாரணப் போர்வீரனாக வாழ்க்கையை ஆரம்பித்து ஐரோப்பாவே அஞ்சி நடுங்கும்படி பாரிஸ் நகரிலிருந்து ஆணை செலுத்திய மாவீரன்தான் பிரஞ்சு சர்வாதிகாரியாகத் திகழ்ந்த நெப்போலியன் போனபார்ட்! புகழ் ஏணியின் முதல் படியிலே நின்றுகொண்டு, "போர் வீரர்களே, நாம் அனைவரும் என்றோ ஒருநாள் இறக்கத்தான் போகிறோம். அப்படியிருக்கும்போது நாட்டுக்காக உயிரிழந்து நல்ல பெயரை நாம் ஏன் சம்பாதித்துக் கொள்ளக்கூடாது?" என்று கேட்ட நாளிலிருந்து, ஏணியின் உச்சியிலே நின்றுகொண்டு, வீழ்ச்சி இனி தவிர்க்க முடியாது என்ற நிலையில் வாட்டர்லூ போர்க்களத்திலே தோல்வியால் துவண்டு நிற்கும போர் வீரர்களைப் பார்த்து, "வீரர்களே, உயிரின்மீது ஆசையிருந்தால் ஓடித் தப்பித்துக்கொள்ளுங்கள்!" என்று எச்சரிக்கை செய்த வரையில் உள்ள அந்தத் தனி மனிதனின் வாழ்க்கையில் ஒரு கண்டத்தின் வரலாறே அடங்கிக் கிடக்கிறது.

நெப்போலியன் பிரபு வம்சத்தில் பிறக்கவில்லை; சீமான்களாலோ செல்வர்களாலோ சீராட்டப்படவுமில்லை. சொல்லப்போனால் பிறப்பால் அவன் பிரஞ்சுக்காரனுமல்லன். அவன் ஒரு இத்தாலியன். கார்சிகா தீவிலே பிறந்தவன். அவன் பிறந்த ஆண்டு 1769. சிறுவனாக இருந்தபொழுது கார்சிகா தீவை பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமெனக் கனவு கண்டவன். ராணுவக் கல்வி பெறுவதற்காக பிரான்சுக்குச் சென்றான். அங்கு பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தான். ராணுவப் பள்ளியில் பணக்கார மாணவர்கள் அவன் ஏழை என்பதால் அவனை அலட்சியமாக நடத்தினர். ஆகவே, யாருடனும் அதிகமாகக் கலந்து பழகாமல் தனிமையிலேயே பெரும்பொழுதைக் கழித்தான். அப்பொழுது அவன் கண்ட கனவுகள்தான் அவனுடைய லட்சியங்களை உருவாக்கியிருக்கவேண்டும். சாதாரணப் போர்வீரனாகத் தொடங்கி தனது திறமையால் ராணுவ அதிகாரியாக உயர்ந்தான். இந்த நிலையில்தான் பிரஞ்சுப் புரட்சி தோன்றியது. புரட்சியை நெப்போலியன் ஆதரித்தான். அவனுடைய ராணுவத் திறமையால் கலகக்காரர்களிடம் மிகுந்த செல்வாக்கைப் பெற்றான். இருபத்தேழு வயதிலேயே பிரஞ்சுப் படையொன்றின் பிரதமத் தளபதியாக நியமிக்கப்பட்டான். அது பிரான்ஸ் நாடு, ஆஸ்திரியா ஜெர்மனி ஆகிய நாடுகளின் கூட்டுப் படையெடுப்பை சமாளிக்க வேண்டியிருந்த சமயம். நெப்போலியன் அப்படையெடுப்பை முறியடித்து ஆஸ்திரியப் படைகளைப் பிரஞ்சு மண்ணிலிருந்து விரட்டியதோடு மட்டுமின்றி, ஆல்ப்ஸ் மலையைத் தாண்டிச் சென்று ஆஸ்திரியாவின் ஆதிக்கத்திலிருந்த வட இத்தாலியப் பகுதிகளையும் வென்று பிரஞ்சு ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தான்.

பிரஞ்சுப் புரட்சிக்காரர்களால் நிறுவப்பட்ட சர்க்காரை பிரிட்டன் அங்கீகரிக்க மறுத்து அவர்களுக்கு எதிராக சில முஸ்தீப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தது. கிழக்கத்திய நாடுகளோடு பிரிட்டன் கொண்டிருந்த வியாபார மார்க்கங்களைத் துண்டித்து, அவர்களுடைய ஆசிய சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றிவிட வேண்டுமென்று பிரஞ்சு சர்க்காருக்கு நெப்போலியன் யோசனை கூறினான். பெரும் படையொன்றுக்குத் தலைமை தாங்கி எகிப்து நாட்டுக்குள் நுழைந்தான். எகிப்தை வென்று பாலஸ்தீனத்தை நோக்கிப் புறப்பட்டான். அலெக்சாண்டர் வென்றதைவிடப் பெரும் நிலப்பரப்பை நெப்போலியன் வென்றிருக்கக் கூடும். நைல்நதிப் போரில் பிரஞ்சுக் கப்பல் படைக்கு ஏற்பட்ட தோல்வியும், தாயகத்தில் ஏற்பட்ட நெருக்கடியான நிலைமைகளும் தன் படைகளை அப்படியே விட்டுவிட்டு நெப்போலியனை பிரான்சுக்குத் திரும்பச் செய்தன. அவன் பிரான்ஸ் வந்தபொழுது, தான் வென்ற பெரும் பகுதி மீண்டும் ஆஸ்திரியர்களிடம் சென்றுவிட்டதை அறிந்தான். பிரஞ்சு சர்க்கார் நாட்டைக் காக்கத் திறமையற்று அவல நிலையில் இருந்தது. பிரஞ்சு வருகைக்கு மக்களிடையே நல்ல வரவேற்பிருந்தது. பிரஞ்சுக் குடியரசு ஆட்சிப் பொறுப்பை மூன்று கான்சல்கள் அடங்கிய குழுவிடம் ஒப்படைத்தது. அந்த மூவரில் நெப்போலியன் தலைமைக் கான்சலாக நியமிக்கப்பட்டான்.

அதிகார பலத்தோடு இப்பொழுது நெப்போலியன் படை நடத்திப் புறப்பட்டான். இத்தாலிய மண்ணிலிருந்து ஆஸ்திரியர்களை விரட்டி தன்னையே இத்தாலியின் மன்னனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான். ஆஸ்திரிய நாட்டின் தலைநகரான வியன்னாவைக் கைப்பற்றினான். ஆஸ்டர்லிட்ஸ் போர்க்களத்தில் ஆஸ்திரிய, ரஷ்யப் படைகளைத் தோற்கடித்தான். தொடர்ந்து பிரஷ்யப் படைகளை வென்றான். 1,802—ம் ஆண்டில் பிரதம கான்சல் பதவியை ஆயுள் பரியந்தம் அவனுக்கு பிரஞ்சு சர்க்கார் அளித்தது. 1804—ல் சக்ரவர்த்தி என்ற பட்டத்தையும் அளித்துக் கௌரவித்தது.

ஐரோப்பாவில்தான் வென்ற நாடுகளிலெல்லாம் தன் சகோதரர்களையும் படைத்தலைவர்களையும் அரசர்களாக நியமித்தான். 1810—ல் ஆஸ்திரியச் சக்கரவர்த்தியின் மகளைத் திருமணம் செய்துகொண்டான். கிழக்கே ரஷ்யா, துருக்கி; மேற்கே பிரிட்டிஷ் தீவுகள் நீங்கலாக மற்ற ஐரோப்பிய நாடுகளெல்லாம் நெப்போலியனின் ஆணைக்குக் கட்டுப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் தீவுகளின்மீது படையெடுக்க போலோன் நகரில் ஏராளமான படைகளைக் குவித்திருந்தான். பிரிட்டிஷ் கால்வாயைக் காவல் புரிந்த பிரிட்டிஷ் கப்பற்படை நெப்போலியன் திட்டம் நிறைவேறாமல் தடை செய்தது. மனமுடைந்த நெப்போலியன், "பிரிட்டிஷ் கால்வாயில் ஆறு மணி நேர ஆதிக்கம் கிடைக்கட்டும்; பிரிட்டிஷ் தீவுகளை சரணடையச் செய்கிறேன்!" என்றான். அந்த ஆறு மணி நேர ஆதிக்கம் நெப்போலியனுக்குக் கடைசி வரையில் கிடைக்கவே இல்லை!

ஐரோப்பிய நாடுகள் பிரிட்டனோடு கொண்டிருந்த வியாபாரத் தொடர்பை உடைத்தெறிந்து, பிரிட்டனைப் பட்டினிபோட முயன்றான். அப்பொழுதும் பிரிட்டனின் கடலாதிக்கமே அந்நாட்டைக் காப்பாற்றியது. பிரிட்டிஷ் கப்பற்படைக்கும் பிரஞ்சுக் கப்பற்படைக்குமிடையே நடந்த ட்ரஃபால்கர் சண்டையில் பிரஞ்சுக் கப்பற் படை முறியடிக்கப்பட்டது. பிரிட்டனோடு வியாபாரத் தொடர்பை வெட்டிக்கொள்ள ரஷ்யா மறுத்தது. தன் வேண்டுகோளை நிராகரித்த அந்நாட்டைத் தண்டிக்க ஐந்து லட்சம் வீரர்களுக்கு மேற்பட்ட படையுடன் நெப்போலியன் கிழக்கு நோக்கிப் புறப்பட்டான். போர்க்களத்திலே பிரெஞ்சுக்காரர்கள் வெற்றியடைந்து, மாஸ்கோ நகரையும் சென்றடைந்தனர். மாட மாளிகை நிரம்பிய மாஸ்கோ ஒரே தீப்பிழம்பாகக் காட்சியளித்தது. பிரெஞ்சுப் படைகளுக்கு உணவு கிடைக்கா வண்ணம் செய்ய நகரையே பின்வாங்கிய ரஷ்யப் படைகள் கொளுத்திச் சென்றுவிட்டன. உணவின்றி பிரஞ்சு வீரர்கள் பட்டினி கிடந்தனர். ரஷ்யர்கள் ஒப்பந்தம் செய்துகொள்ள வருவார்கள் என்று எதிர்பார்த்த நெப்போலியன் ஏமாந்தான். கொடுமை நிரம்பிய ரஷ்யக் குளிர்காலம் வேறு ஆரம்பித்தது. கடுங்குளிரைத் தாங்கிப் பழக்கப்படாத பிரெஞ்சுப் படை சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாகியது. உடைந்த உள்ளத்தோடு நாடு திரும்பினான் நெப்போலியன். வழியில் பல்லாயிரம் வீரர்கள் பயங்கரக் காலநிலைக்குப் பலியாயினர். படையில் பாதிக்குமேல் இழந்த நிலையில் நெப்போலியன் பிரஞ்சுமண்ணில் அடிவைத்தான். மாதவி, சென்ற யுத்தத்தில் ஹிட்லரின் படைகளை ரஷ்யர்கள் தோற்கடிக்கக் குளிர்காலம் பெருமளவில் துணை புரிந்ததையும் ஒப்பிட்டுப் பார்!

தோல்வி கண்டு நெப்போலியன் துவளவில்லை! அவன் மீண்டும் பெரும்படை திரட்டும் முயற்சியில் ஈடுபட்டான். நெப்போலியனின் பலஹீனமான நிலையை பிரிட்டன் பயன்படுத்திக் கொண்டு ஸ்பெயின் நாட்டில் தன் படைகளை இறக்கியது. ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா ஆகிய நாடுகள் கூட்டணி அமைத்து நெப்போலியனை எதிர்த்தன. ஜெர்மனியில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டு பிரான்சு நோக்கி விரட்டப்பட்டான். நெப்போலியனோடு எதிரிகள் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தயாராய் இருந்தனர். ஆனால் அவர்கள் விதித்த நிபந்தனைகளை நெப்போலியன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் வகுத்த எல்லைக்குள்ளிருந்து அவன் ஆட்சி செய்ய விரும்பவில்லை. அதிகமான பகுதிகள் கேட்டான். எதிரிப் படைகள் பிரான்சில் புகுந்தன. பாரிஸ் நகரம் வீழ்ந்தது. நெப்போலியன் முடியிழந்தான். எல்பாத் தீவுக்கு நாடு கடத்தப்பட்டான். பிரஞ்சுப் புரட்சியில் கொல்லப்பட்ட மன்னனுடைய சகோதரன் ஒருவன் பிரான்சின் அரசனாக்கப்பட்டான்.

ஓராண்டுக்குள் நெப்போலியன் எல்பாத் தீவிலிருந்து தப்பி வந்தான். நாட்டை அரசியல்

[தொடர்ச்சி பக்கம்—10]

"போர்வீரனே; கூர்வாள் பிடித்தவனே! என்றோ ஒருநாள் சாகத்தான் போகிறாய்! இன்றே நாட்டுக்காக கொடுத்துவிடு உயிரை!"



மாவீரன் நெப்போலியன்

கலப்படம்

★ நேரு-தரையில் ஓடும் கப்பல்! நீர் கண்டால் நிற்கும் குதிரை! ★

['அகில இந்திய ரீதி'யில் நேருவின் பிறந்ததின விழா கொண்டாடப்பட்டது. அவ் விழாவிற்கு அனுப்பப்பட்ட சில கடிதங்களின் சாரம் கீழே தரப் பட்டுள்ளது. சென்ற வாரம் சுதேசமித்திரன் ஞாயிறு மலரில் (14—11—59) 'நாம் அறியா நேரு'—என்ற தலைப்பில் வெளி வந்த கட்டுரைதான் இந்த வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களை உருவாக்கிய பெருமையை அடையும் உரிமை பெற்றது!]

முன்னாள் தோழர் ஜவஹர் லாலுக்கு,

என்னை நீங்கள் மறந்திருந்தால் நான் ஆச்சரியப்படமாட்டேன். மனிதர்களுக்கேயுரிய பண்பு அது. உயர்ந்து போகும் போது கடந்த காலத்தில் பழகியவர்களை மறப்பது சகஜம்தான். 1930—ம் ஆண்டு உங்களைக் கைது செய்தார்கள், பிரிட்டிஷார்! பொங்கி எழுந்தார் உங்கள் தகப்பனார்! அரசியல் ஆவேசத்தோடு புத்திர பாசமும் அவருக்கிருந்தது. எங்களை எல்லாம் ஊக்குவித்தார். உங்கள் புகழ் பரவிற்று. ஆகவே உங்கள் புகழ் இப்படிப் பரவியதற்கு முக்கியமானது உங்கள் தந்தையின் தொண்டு என்பதை மறந்து விடாதீர்கள். அவர் உங்களை உயர்த்தும் புகழ் ஏணியாகப் பயன்பட்டார்; தன் கையே தனக்கு உதவி—என்பதை எப்போதும் நினைவில் வைக்க வேண்டுகிறேன், எங்களைப் போன்ற பழைய காங்கிரஸ் தியாகிகளை மறந்து விட்டாலும்!

உங்கள் பிரியமுள்ள,
(5 ஏக்கர் கொடுக்கப்பட்டு பின்னர் பிடுங்கப்பட்டதால் மனமுடைந்த)
தியாகி

✻

காம்ரேட் நேரு!

உங்கள் பிறந்தநாளில் ரஷ்யப் பிரதமர் காம்ரேட் குருஷேவின் வாழ்த்துக்கள். இதற்குமேல் அதிகமாக உங்களைப் புகழமாட்டேன். புகழ்ந்தால் அது தனி நபர் வழிபாடாக மாறிவிடும். இது மார்க்ஸ் கோடு சட்டம் 172—ம் பிரிவின்படி கிரிமினல் குற்றம். அக் குற்றத்தைப் புரிய எனக்கு இன்னும் சர்வ அதிகாரம் முழுசாக வரவில்லை!

போன தடவை நானும், பரிதாபத்திற்குரிய காம்ரேட் புல்கானினும் வந்தபோது நீங்கள் என்னை வார்த்தையால் குட்டியதாக செய்தி வெளிவந்திருக்கிறதாம்....நான் ஏதோ மகா பயங்கரமான ஆயுதத்தை ரஷ்யர்கள் கண்டுபிடித்திருப்பதாகக் கூறி தலைகால் தெரியாமல் மகிழ்ச்சியால் குதித்தேனாம். உடனே நீங்கள் அசோக மன்னன் கதையைச் சொல்லி அகிம்சையை உபதேசித்ததாகவும் கூறப்படுகிறது.

அகிம்சையைக் கடைப்பிடிப்பதாகக்கூறிவரும் நாட்டின் காவலரே! அகிம்சை கோழைகளின் ஆயுதமல்ல! அணுகுண்டும் ஐட்ரஜன் குண்டும் இல்லாதவன் பேசுவது சமாதானமல்ல! ஆயுதம் நிறைய இருக்கும் எங்களைப் போன்றவர்கள் சமாதானம் பேசினால்தான் அது சமாதானம், அகிம்சை—என்று கூறத் தகுதி உடையது.

இதற்குமேல் எழுதினால் சின்ன மக்மோகன் எல்லையைத் தாண்டிய மாதிரி நானும் ஏதாவது ஒரு எல்லையைத் தாண்டிவிடநேரும்!

புரட்சி வாழ்த்துக்கள்.
நிகிதா குருஷேவ்

✻

மகா—ா—ா—ஸ்ரீ நேரு துரை அவர்களுக்கு,

தைல வியாபாரி ஆயிரம் தண்டம் போட்டு எழுதியது என்னவென்றால் அடியேன் தங்கள் கிருபா கடாட்சத்தால் க்ஷேமம். துரையவர்களின் க்ஷேமத்தை அறிய ஆவலாய்உள்ளேன். சுமார் 34 வருஷங்களுக்கு முன்பு தங்களைச் சந்திக்க வந்தேன். தங்கள் தலையிலுள்ள வழுக்கையை போக்கடிக்க ஒரு தைலம் தந்தேன். அதைத் தாங்கள் நாற்றமடிக்கிறதே—என்றீர்கள்! இந்த சம்பவத்தை எங்களூர்க்காரரிடம் கூறினேன். அவர் கூறினார். நேரு துரை ஆளுகிற நாட்டிலும்கூட அப்படி சில பிரதேசங்கள் வழுக்கை விழுந்து போகிறது. இன்னும் சில பிரதேசங்கள் செழிப்பாக வளர்கின்றன! இந்த வழுக்கையைப் போக்க அவர் பயன்படுத்தும் மருந்து கூட நாற்றமடிக்கிற 'இந்திய ஒற்றுமை'—எனும் தைலம்தான் என்றார். இதெல்லாம் எனக்கொன்றும் புரியவில்லை. துரை நல்லா வாழ்ந்தால் போதும்!

அன்புள்ள,
தைல வியாபாரி

✻

ஸ்ரீ ஜத் பிரதம பிரதானி ஜவஹர்லால் நெஹ்ருவுக்கு,

பாக்கிஸ்தான் எல்கையிலிருந்து ஓடிவந்த அகதி லாலா எழுதிக்கொண்டது. உங்கள் கிருபையால் நாங்கள் சுகமே. ஒரு குழந்தைக்கு 'லால்'—என்று பெயரிட வேண்டாம் என்றீர்களாம்! இருந்தாலும் உங்கள் உள்ளத்தில் லாலாக்களுக்குத் தனி இடம்தான். எவ்வளவுதான் சாவதேசப் பார்வை பார்த்தாலும் உங்களுக்கு வடக்கு என்றால் ஒரு தனிப் பார்வைதான்! இலங்கையிலிருந்து ஓடிவரும் தமிழர்களை, மலேயாவிலிருந்து துரத்தப்பட்டு வரும் தமிழர்களைக் கவனிக்காவிட்டாலும் வடக்கே இருந்து வருகின்றவர்களை கையேந்தி வரவேற்கும் தங்கள் 'இனப்பற்று' வளர்க! அந்தப் பற்று வெறியாக மாறிட எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன். ஏனெனில் அப்போதுதான் எங்களுக்கு அதிக சலுகை கிடைக்கும்.

தங்கள் கீழ்ப்படிந்துள்ள,
மிட்டாய்கடை
லாலா

✻

பிரதம மந்திரி அவர்களுக்கு,

முன்பொரு தடவை உங்கள் கோடீஸ்வர தகப்பனார் மோதிலால் நேரு கோபத்தால் கண் சிவக்க மாட்டு வண்டியில் உங்கள் வீட்டுக்குச் சென்றீர்கள்; சுதேசிப் பொருட்களை நீங்கள் ஆதரித்தீர்கள்!

ஆனால் இப்போது 'காந்தியப் பொருளாதார நிபுணர்' குமரப்பா திட்டக் கமிஷன் கூட்டத்திற்கு மாட்டு வண்டியில் வந்த போது வழிமறித்தது உங்கள் சர்க்கார். ஏழை நாடாம் இந்தியாவிற்குத் திட்டமிடுவதற்கு மாட்டு வண்டியில் வரக்கூடாது—என்ற புதுச் சட்டத்தைப் போட்டிருக்கிறீர்கள்! குமரப்பா உங்களிடம் அதை இடித்துக்காட்டியும்கூட தாங்கள் ஏதோ சாக்குப் போக்கு சொல்லி மழுப்பிவிட்டீர்களாம்!....

நீங்கள் பிரதம மந்திரியானதில் யார் யாருக்கோ நன்மை. ஆனால் எங்களுக்கு வாழ்வே போய்விட்டது.

தங்களிடம் அன்பு குறைந்துவிட்ட,
மாட்டு வண்டிகள்.

✻

இந்தியாவின் முதலமைச்சர் நேரு அவர்களுக்கு,

எம்பாயிமெண்ட் எக்ஸ்சேஞ்சு 1,73,421-ம் நெம்பருள்ள வேலையில்லாத படித்த வாலிபன் எழுதுவது. வணக்கம், எங்களைப் போலவே நீங்களும் முன்பு வேலையில்லாமல் திரிந்தீர்கள்—என்று கேட்டு உள்ளூர மகிழ்ச்சி அடைகிறேன். எந்தப் பிறவி வேண்டுமானாலும் எடுக்கலாம். ஆனால் வேலையில்லாத வாலிபனாக யுகயுகாந்திரத்திலும் பிறவி எடுக்க வேண்டாமய்யா!

இத்தனையும் நீங்கள் தெரிந்திருந்தும், இதில் சிலவற்றை அனுபவித்திருந்தும், உங்கள் ஆட்சியில் லட்சக் கணக்கான வாலிபர்கள் வேலையில்லாதவர்களாகத் திரிவது சரியோ; முறையோ?

தங்கள்,
வேலையில்லாதவன்.

✻

பரிவும், அற்ப விஷயத்தில் அக்கரையுமுள்ள பிரதம மந்திரிக்கு,

சூடும் சொரணையுமுள்ள ஒரு தென்னகத்து மந்திரி எழுதிக் கொள்வது. நீங்கள் ஆச்சரியப் படலாம்! தென்னக மந்திரியாவது....சூடாவது சொரணையாவது டில்லிக்குக் கடிதம் எழுதுவதாவது...! உண்மைதான். என்ன செய்வது; எல்லாம் காலக் கோளாறு: எனக்கும் கூட ரோஷம் பிறந்து உங்களைப் பார்த்துக் கேட்கிறேன்:

சாதாரண வேலைக்காரன் சாப்பிடாவிட்டால்கூட நினைவு வைத்துக் கேட்பீர்களாம் நீங்கள்! ஆனால் அரசியல் வாழ்க்கையில் 'தென்னகம் வளம் பெற்றதா? தட்சிணப் பிரதேசம் உயிர் வாழ்கிறதா?'—என்று நீங்கள் கேட்டதுண்டா? தலைவராகும் பிரச்சினை

[தொடர்ச்சி பக்கம்—11]

எமது புதிய வெளியீடு......

சிறுகதை இலக்கியத்தில் அரியதோர் செல்வம்! புதுவழி புனைந்துகாட்டும் புதையல்!

ரூ. 1-50

விற்பனைக்கழிவு உண்டு
தனிப் புத்தகம் வேண்டுவோர் ரூ 1-75. M.O. அனுப்பவும்.

முத்துவேல் பதிப்பகம் } 77, மதுரை சாலை, திருச்சிராப்பள்ளி-8

25. வேடம் கலைந்தது!

தன் ஆருயிர்க் காதலி முத்துநகையின் உதவியைக் கொண்டே அவளையறியாமலேயே—அவள் யாருக்காகப் பணிபுரியக் கிளம்பியிருக்கிறாளோ—அந்தக் கரிகாலனைப் பழிவாங்கிவிடலாம் என்று தான் இருங்கோவேள், அருமையானதொரு திட்டம் வகுத்தான். கிழவன் வேடத்திலே முத்துநகையிடம் காட்டிய மாயாஜாலத்தைக் காதல் குறும்புத்தனமென்று அவள் எண்ணி ஏமாறும்படி செய்தான். தன்னுடைய வீரர்களையே குதிரையில் வரச் செய்து முத்துநகையைப் போய்க் கவனிக்குமாறு அனுப்பினான். அவள் மண்டபத்தை விட்டுப்போன சமயம் தன்னைப் போலக் குரூரக் கிழவன் வேடமிட்ட தன்னுடைய ஆள் ஒருவனைத் தன் இடத்திலே நிற்க வைத்துவிட்டு இருங்கோவேள் மறைந்துகொண்டான்.

முத்துநகை, அந்தக் கிழ வேடதாரியைத் தன் காதலன் வீரபாண்டியென்று எண்ணிக்கொண்டு கரிகாலரிடம் அழைத்துச் சென்றாள். அங்கே வேடம் வெளிப்பட்டது. ஆனால் இருங்கோவேளின் ஆள், தன் தலைவன் கூறிய தந்திர மொழிகளை மறக்காமல் வீரபாண்டி என்பவனை அடித்து வீழ்த்திவிட்டு அந்த வேடமிட்டு வந்ததாகப் பொய் கூறி சிறைபட்டுவிட்டான். முத்துநகையோ உண்மையில் தன் காதலன் காயமுற்றுக் கிடப்பதாக எண்ணிக்கொண்டாள். இருங்கோவேளின் பழிவாங்கும் திட்டம் பலிக்கவில்லை. காதலியை ஏமாற்றும் திட்டம் ஓரளவு பலித்தது. அவளுக்கு அவனிடத்திலே தூய்மையான காதல் என்பதும் வெளிப்பட்டுவிட்டது.

*

வெகு நேரத்திற்குப் பிறகு முத்துநகை மயக்கம் தெளிந்து மெள்ள இமைகளைத் திறந்து பார்த்தபோது அவளுக்கு மீண்டும் மயக்கம் வரும்போல் ஆகிவிட்டது. பாழ் மண்டபத்தின் சுவற்றில் எழுதப்பட்டிருந்த அந்த எழுத்துக்களைப் படித்ததும், படிக்கும்போதே நினைவு கலங்கியதும் அவளுக்கு ஞாபகத்திற்கு வந்தன. மயக்கமுற்று மண்டபத்தில்தானே விழுந்தோம்; இப்போது வேறிடத்தில் அல்லவா இருக்கிறோம் என்று அதிர்ச்சி அடைந்தாள். விழிகளை மெதுவாக சுழலவிட்டாள். நிச்சயமாகத் தான் இருக்குமிடம் மண்டபம் இல்லையென்பதைப் புரிந்துகொண்டாள். மரத்தாலான ஒரு வீட்டுக்குள் அவள் படுக்க வைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தாள்.

அது என்ன புதிய வீடா? அல்லது இருங்கோவேளின் பழைய மரமாளிகைதானா? இளைத்துப் போன நினைவுகளுக்குத் தெம்பு ஏறிற்று. இருங்கோவேளின் மர மாளிகையில தான் கிடத்தப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டாள். தன் படுக்கைக்கு அருகே ஒரு தட்டில் பழங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு கிண்ணத்தில் பழரசம் இருந்தது. இவ்வளவு அக்கறையாகத் தன்னை யார் கவனித்திருக்கமுடியும்? கேள்வி எழுந்தது. அதோடு பதிலும் பிறந்தது. எல்லாம் அந்தப் பைத்தியக்காரி தாமரையின் வேலையாகத்தான் இருக்குமென்று முடிவு கட்டிக்கொண்டாள்.

அவளையறியாமல் அவள் கண்கள் நீரைப் பொழிந்துகொண்டேயிருந்தன. தான் மயங்கி விழுந்த பிறகு தாமரை மண்டபத்திற்கு வந்திருக்கவேண்டும். அவள்தான் தன்னை இங்கே கொண்டு வந்திருக்கவேண்டும் என்றும் அவள் முடிவு செய்துகொண்டாள். சுவற்றில் எழுதப்பட்டிருந்த அந்த எழுத்துக்கள் அவள் கண்களின் எதிரே பயங்கரமாகக் கூத்தாடிக்கொண்டிருந்தன. ஒவ்வொரு எழுத்திலிருந்தும் ரத்தம் கொட்டுவதுபோலத் தெரிந்தது. 'அத்தான்! அத்தான்!!' என்று அவள் இருதயம், குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

அவள் கன்னங்களில் வழிந்துகொண்டிருந்த கண்ணீரை ஒரு பெண்ணின் கரம் மெதுவாகத் துடைத்தது. அந்தக் கரத்தின் பக்கம் முத்துநகை திரும்பினாள். தாமரைதான் அருகே உட்கார்ந்திருந்தாள்.

"அத்தான்!" என்று தாமரையின் இதழ்கள் மெல்ல உச்சரித்தன.

உடனே முத்துநகைக்குத் தன்னை சரிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அவசர உணர்ச்சி தோன்றியது. படுத்திருந்தவள், தன் மேல் அணிந்திருந்த ஆண் உடை சரியாக இருக்கிறதா என்று மார்பகத்தைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள். திகீர் என்றது அவளுக்கு. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். தன்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டாள். தான் ஆண் வேடத்தில் இல்லை; பெண்ணாகவே இருக்கிறோம் என்பதை உடனே தெரிந்துகொண்டாள். தன் வேடத்தைக் கலைத்தது யார்? தாமரையாகத்தான் இருக்குமோ? யார் கலைத்தால் என்ன? தாமரைக்குத் தன தந்திரங்கள் புரிந்துவிட்டன. தானும் இங்கு வந்து சிக்கிக்கொண்டாகிவிட்டது. புதிய புதிய ஆபத்துக்கள் ஏதேதோ காத்திருக்கின்றன என்று அவள் தீர்மானித்துத் தாமரையை சற்று வெட்கத்தோடும் கோபத்தோடும் பார்த்தாள்.

தாமரை மிகுந்த சினத்துடன் இருக்கிறாள் என்பது அவள் பார்வையிலேயே புரிந்தது. யார் முதலில் பேசுவது என்ற பிரச்சினையும் இருவரிடையே பலமாக எழுந்தது.

யார்தான் முதலில் பேசமுடியும்? ஒருத்தி ஏமாந்தவள்; இன்னொருத்தி ஏமாற்றியவள். இருவரிடையே நடமாடியதோ காதல் விவகாரம். தன் உள்ளத்தைக் கொள்ளையடித்து இறுதியில் பெருத்த அவமானத்திற்கு உள்ளாக்கிவிட்ட ஒரு வஞ்சகியைப் பழிவாங்கிக்கொள்ள சரியான சந்தர்ப்பம் கிடைத்தது என்று எண்ணிக்கொண்டே தாமரை, அவளைப் பயங்கரமாக நோக்கினாள். வாழ்வில் பேரிடியே விழுந்துவிட்டது. இனி என்ன வந்தால் என்ன என்ற துணிவோடு முத்துநகை உள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். தாமரை வேண்டுமென்றே முத்துநகையின் தங்கம் மின்னும் அங்கங்களை மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் செய்கையில் வெறுப்புற்ற முத்துநகை சற்றுக் கடுமையான குரலில் "என்ன பார்க்கிறாய்?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை, இந்த வாளிப்பான உடம்பை வைத்து எத்தனையோ வாலிபர்களை மயக்கியிருக்கலாமே — நான்தானா கிடைத்தேன் உனக்கு; என்று சிந்தனையை ஓட விடுகிறேன்." என்றாள் தாமரை.

"இப்பொழுது நான் சிறைப்பட்டிருப்பதாக அர்த்தமோ?" என்று கேட்டாள் முத்துநகை,

"அப்படியே நினைத்துக் கொள்ள வேண்டியதுதான். சிறைப்பட்ட காதலரை விடுவிப்பதற்கு இத்தனை நாள் ஆண் உடைக்குள் சிறைப்பட்டிருந்தாய். இப்போது எங்கள் அரண்மனைக்குள் சிறைப்பட்டிருக்கிறாய்."

முத்துநகை தன் திட்டங்களெல்லாம் தவிடுபொடியாகிவிட்டதாக எண்ணிக் கலங்கினாள். இனிமேல் தாமரையிடம் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை என்றும் முடிவு கட்டிக்கொண்டாள். அவளைத்தான் ஏமாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதற்காக ஏதாவது போலிக் காரணங்களைக் காட்டலாம் என்று எண்ணியிருந்தாள். ஆனால் அந்த எண்ணமும் பலிக்காது என்பது தாமரையின் பேச்சி

லிருந்து நன்ருக விளங்கி விட்டது. செழியனை மீட்டுச் செல்வதற்காகவே தான் ஆண் வேடம் பூண்டுவந்ததாக தாமரை கண்டு பிடித்துவிட்டாள். இனிமேல் நடப்பது நடக்கட்டுமென்று பேசாமல் இருக்கவேண்டியது தான்.

தப்பித்துக் கொள்ள வேறு வழியில்லை. திடீரென்று இந்தச் சூழ்நிலையைத் தலைகீழாகக் கவிழ்க்கக் கூடிய மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டாலன்றி தனக்கு விடுதலை இல்லை; செழியனுக்கும் விடுதலை இல்லை.

இப்படிப்பட்ட முடிவுகளால் முத்துநகை தன்னைத் திடப்படுத்திக் கொண்டாள்; தாமரைக்கு முத்துநகையைக் கேலி செய்து ஆத்திரமூட்ட வேண்டும் என்று தோன்றியது. ஏனெனில் அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் அத்தகையது. அவள் சந்தித்த அந்த அவமானகரமான சூழ்நிலையை அவளைப்போல் அனுபவித்துப் பார்த்தவர்களால்தான் வர்ணிக்க இயலும். எத்தகைய கொந்தளிப்பை நெஞ்சத்தில் உண்டாக்கக்கூடிய சம்பவம்அது என்பதையும் அனுபவித்தவர்களே புரிந்து கொள்ள முடியும்.

"சரியத்தான், நான் போய்வருகிறேன், நிம்மதியாகத் தூங்குங்கள்." என்று அவள் எழுந்தாள்.

"போய் வாடி ஏமாளி!" என்ருள், ஆத்திரமாக முத்துநகை.

"ஏனத்தான் கோபித்துக் கொள்கிறீர்கள்? என் ராஜா! இப்படியெல்லாம் ஆத்திரப்படலாமா? கண்ணாளா! கண்ணயருங்கள்!" என்று மீண்டும் கேலி புரிந்தாள் தாமரை.

பதில் கூருமல் இருப்பதுதான் நல்லது என்று கருதியவளாய் முத்துநகை வேறுபக்கம் திரும்பி உட்கார்ந்து கொண்டாள், சற்று நேரம் அங்கேயே நின்று விட்டுத் தாமரை வெளியேறினாள். அவள் வெளியேறியதைத் தொடர்ந்து கதவு சாத்தப்பட்டு வெளியே பூட்டப்படுவதை கவனித்தாள் முத்துநகை.

●

பாழ் மண்டபத்தில் முத்துநகை மயக்கமுற்று விழுந்ததும் அருகாமையிலுள்ள புதர் மறைவிலிருந்து இரண்டுபேர் ஓடி வந்தார்கள். அவர்களில் ஒருவன் இருங்கோவேள். இன்னொருவன் இருங்கோவேளின் ஆள். விழுந்துகிடந்த முத்துநகையை இருங்கோவேள் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு முகத்தைப் பார்த்தான். மூச்சு இழைந்து கொண்டிருந்தது.. உடனே தன ஆளை அனுப்பிக் குதிரையைக் கொண்டுவரச் சொல்லி முத்துநகையையும் குதிரையில் ஏற்றிக் கொண்டு மரமாளிகை நோக்கிப் பறந்து விட்டான். மரமாளிகையில தன் தங்கை தாமரையின் அறையில் அவளைப் படுக்க வைத்து தங்கையிடம் ஒப்புவித்துவிட்டு வெளியேறினான்.

"என் பேச்சை நீ நம்புவதற்கு மறுத்தாயே—இதோ கொண்டு வந்து விட்டேன் உன் காதலனை. இனிமேலாவது அண்ணன் வார்த்தை சரிதானு என்று சோதித்துப்பார்!" என்று கூறி முத்துநகையை வெளியேற முடியாதபடிக் காவல் போட்டு விட்டுச் சென்று விட்டான்.

அவன் போன பிறகு நடந்த நிகழ்ச்சிதான் முதலில் தீட்டிக் காட்டப்பட்டது.

●

அன்றிரவு மர மாளிகையில் என்றுமில்லாத அமைதி குடி கொண்டிருந்தது. காரணம், இருங்கோவேள் முகம் மிகவும் சோகமாகக் காட்சியளித்தது தான் போலும். தலைவனின் முகத்தில் செழிப்பில்லையென்றதும் வீரர்களுக்கு உற்சாகம் எங்கிருந்து வரும்? அதனால் அவர்கள் அன்றிரவு கூத்து கும்மாளம் எதுவுமின்றி சோர்வுடன் காணப்பட்டார்கள்.

கரிகாலனைப் பழிவாங்குவதற்குத் தான் செய்த அருமையான முயற்சி தோல்வி யடைந்ததே என்பதை எண்ணி எண்ணி இருங்கோவேள் சோர்வுற்ருன்; அதோடு முத்துநகையின் பிரச்சினை வேறு அவனுக்குப் பெருங் குழப்பமாக வந்து முடிந்தது. தன்னை உயிரினும் மேலாக நேசிக்கும் ஒருத்தி தன்னையே பழிவாங்கத் துடித்து நிற்கிருள் என்று எண்ணும்போதும் அவளைத்தான் ஏமாற்றி அவளது காதலுக்குப் பெருஞ்சோதனையை உண்டாக்குவதை நினைக்கும் போதும் அவனுல் அந்தச் சிக்கலை எப்படி அவிழ்ப்பது என்றே தோன்றவில்லை—திண்டாடினுன்.

இந்தக் குழப்பங்களோடுதான் அவன் அன்றிரவு தன் ராணியைப் போய்ச் சந்தித்தான். கணவனின் முகத்தில் என்றுமில்லாத சோகம் கப்பியிருப்பதைக் கண்டு அரசி கலங்கினாள். தன் கணவன் பல நாடகளாகவே சோகச் சிலையாக மாறிவிட்டான் என்பது அவளுக்குத்தெரிந்திருந்தாலும் அன்றையதினம் அவள் கண்ட இருங்கோவேள் நடைப்பிணம் போல் தோன்றியதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அரசியின் அருகே சென்று இருங்கோவேள் அமர்ந்தான். இருவரின் விழிகளும் உறவாடிக் கொண்டன. அரசி கண்ணீர் வடித்தாள்.

கரகரத்த குரலில் இருங்கோவேள், "அழாதே கண்ணே!" என்று ஆறுதல் கூறி அவளைத் தன் அகன்ற மார்பின் மீது சாய்த்துக் கொண்டான்.

"இந்தச் சோகத்திற்கு முடிவே கிடையாதா?" என்று அவள் கேட்டாள்.

மன்னன் பதிலுரைக்கவில்லை.

"இந்த வாழ்க்கையில் மாற்றமே இல்லையா?"

இருங்கோவேளின் உதடுகள் அசைந்தன.

"ஏனில்லை! இருங்கோவேள், தன் லட்சியம் நிறைவேருமல் சாகமாட்டான்." என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினுன்.

"அந்தக் கரிகால் மன்னர் ஒழிக்கப்பட வேண்டும். அதுதானே உங்கள் லட்சியம்?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள் அரசி.

"ஆம் கண்ணே! அதுதான் நமது லட்சியம். ஏன் உனக்குப் பிடிக்கவில்லையா, இந்த லட்சியம்?"

"என் ராஜாவின் லட்சியமே என் லட்சியம், அந்த லட்சியம் நிறைவேற இந்த உயிர்போனுல் எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சி. ஆனுல் கேவலம் இருமல் அல்லவா என் உயிரை வாங்கிவிடும் போலிருக்கிறது!" என்று கூறியவாறு இரும ஆரம்பித்தாள்.

இப்போதும் கடுமையான இருமல், நெஞ்சுவலி. தாமரை ஓடி வந்து சிகிச்சைகளில் ஈடு பட்டாள்.

நீண்ட நேரம் கஷ்டத்துக்குப் பிறகு அரசியைப் படுக்க வைத்துத் தூங்கச் செய்துவிட்டு தாமரை படுப்பதற்குப் போய் விட்டாள். அது வரையில் அங்கேயே உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தான் இருங்கோவேள். முத்துநகையை சோதிப்பதற்காகச் சுவற்றில் எழுதி வைத்த அந்த எழுத்துக்களைக் கண்டு அவள் அலறிக் கீழே சாய்ந்த காட்சி அவனை ஒரு உலுக்கு உலுக்கும். அதே சமயம் ராணியின் பயங்கர இருமலும் அந்த இருமலிடையே "என் ராஜாவின லட்சியத்தை நானும் நிறைவேற்றுவேன்" என்றுராணி கூறுவதும் அவன் இதயத்தை உசுப்பும். கரிகாலனின் உருவம் எதிரே வந்து நின்று, "அடே இருங்கோவேள்! என்னை உன் சூழ்ச்சி ஒன்றும் செய்யாது!" என்று நகைமுழக்கம் செய்வது போலிருக்கும்.

தாமரை போன பிறகு இருங்கோவேள் மனைவியின் கால்பக்கம் போய் அமர்ந்து அவள் கால்களைத் தடவிக் கொண்டே உட்கார்ந்திருந்தான். முரட்டுக் குணம் படைத்த அவன் இதயத்திலிருந்து கிளம்பிய சோகப் பெருவெள்ளம் கண்களின் வழியே உடைப்பெடுத்து ஓடிக் கொண்டிருந்தது.

ராணி திடுக்கிட்டு எழுந்தாள். கால்களை வருடிக் கொண்டிருக்கும் கணவனின் கரங்களை எடுத்துக் கண்களில் ஒத்திக்கொண்டாள். அவனை அப்படியே ஆரத் தழுவி அவன் கால்களில் தன் தலையை வைத்துக் கொண்டாள். ஒருவருக்கொருவர் பேசாமலே தங்கள் உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொண்டனர். பின்னர் இருங்கோவேள் அரசியை ஒழுங்காகப் படுக்க வைத்து விட்டு அவள் கனனத்தை வருடி விட்டு அந்த அறையினின்றும் வெளியேறினுன். அரசியும் கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தாள்.

வெளியேறிய இருங்கோவேள், முத்துநகை பூட்டப்பட்டிருந்த அறையின் வழியாகச் சென்று அங்குள்ள பலகணியில் எட்டிப் பார்த்தான். அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். பின்னர் அங்கிருந்து தன் மாளிகைக்குச் சென்று கட்டிலில் தடால் என விழுந்து உறங்குவதற்கு முயற்சி செய்தான். மாளிகையுள்ளும் புறமும் நடுநிசியின் பயங்கர அமைதி குடிகொண்டிருந்தது. அரசி மட்டும் தூங்காமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள். மெல்ல பலகணி வழியே, வெளியே எட்டிப் பார்த்தாள். ஒரே அமைதி! காற்றில் மரங்கள் அசைந்து ஏற்பட்ட சலசலப்பைத் தவிர வேறு ஒலியில்லை. எங்கேயோ தொலைவில் நரியின் ஊளைச் சப்தம் விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது.

அரசி தாமரை படுத்திருந்த இடத்திற்குபோய் கவனித்துப் பார்த்தாள். தாமரையும் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். தோழிகள் படுத்திருந்த இடத்தைக் கவனித்தாள். அவர்களும் அயர்ந்த உறக்கத்தில் கிடந்தனர். அடிமேல் அடி வைத்து இருங்கோவேளின் தேவி தான் படுத்திருந்த இடத்தை விட்டு நகரத் தொடங்கினாள். இருமல், அவளைக் காட்டிக் கொடுக்க முனைந்தது. மிகச்சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

மாளிகைக்கு வெளியே வந்து விட்டாள். குதிரைக் கொட்டடிக்கு வந்து சேர்ந்தாள். குதிரைகள் கனைத்துக் கொண்டும், தீனி தின்று கொண்டும் அமைதியற்று நின்று கொண்டிருந்தன. கொட்டடிக்குள் நுழைந்தாள். அவளையும் மீறி ஒரு இருமல். காவலன் விழித்துக் கொண்டான்.

"யார் அது?" என்று அருகே ஓடிவந்தான். கையிலிருந்த தீப்பந்தத்தால் முகத்தைப் பார்த்தான்.

அரசி, அதிகார தோரணையில் "ஸ்! சும்மா இருடா ஒரு குதிரையை அவிழ்த்து வா!" என்று கட்டளையிட்டாள.

காவலன், அரசிக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு குதிரையைக் கொண்டு வந்து நிறுத்தினுன். அதில் எப்படித்தான் ஏறி உட்கார்ந்தாளோ; தெரியாது — குதிரை பறந்தோடத் தொடங்கியது. குதிரை போன பிறகு காவலனுக்கு யோசனை பிறந்தது.

"இந்த அகாலத்தில் அரசி எங்கே தனியாகப் போகிருர்கள்?"

"அய்யய்யோ! அவர்கள் நோயாளியாயிற்றே!"

காவலன் இப்போதுதான் தெளிவாக விழிப்படைந்தான். இதை மன்னரிடம் சொல்லாமல் இருக்கக் கூடாதென்று இருங்கோவேள் இருப்பிடம் நோக்கி ஓடினுன்.

[தொடரும்]

மதுரை மாவட்ட

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக

முதல் மாநாடு.

★

மதுரை விக்டோரியா எட்வர்ட் ஹாலில்

29—11—59 காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும்.

★

தலைவர்: கே. ஏ. கிருட்டிணசாமி பி.ஏ. (ஆனர்ஸ்)

திறப்பாளர்: பி. எஸ். மணியம் பி. ஏ. பி. எல்.

மாநாட்டில் தி. மா. மு. க. பேச்சாளர் பலரும் பேசுவர்.

எஸ். டி. சோமசுந்தரம் (பி.இ.)
மாணவப் பொதுச்செயலாளர்.

நூலேணி

அண்ணாவின் சட்டசபைச் சொற்பொழிவுகள் -2

அறிஞர் அண்ணா அவர்கள் சட்ட மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தெளிவான கொள்கைகளை எடுத்தோதும்போது பார்த்தவர்கள் பூரிப்பும் பெருமிதமும் அடைவார்கள். நாளிதழ்களில் படித்தோர் புதிய தெளிவும், முகத்தில் ஒளியும் பெற்றிருப்பார்கள். ஆனால் அவர் சொற்பொழிவுகளைக் கேளாதவர்களுக்கும், தொகுத்துப் படிக்க ஆசை கொண்டவர்களுக்கும் பயன்படுகின்ற வகையில் புத்தக உருவாக வெளியிட்டிருக்கிறார்கள், கலைமகள் நிலையத்தார்.

முதல் தொகுப்பைவிட எழிலும் பொலிவும் நிரம்பிக் காட்சியளிக்கிறது இந்தத் தொகுப்பு. சமுதாய நலத்திட்டம், போலீஸ் துறை, அரிசனப் பிரச்சினை, நீர்ப்பாசனம், உணவுப் பிரச்சினை, விவசாய வருமான வரி, ஊராட்சி மன்றப் பிரச்சினை, கெஜட் பதிவில்லாத ஊழியர்களின் நலம், நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டும் பிரச்சினை—ஆகியவற்றில் தெளிவான கொள்கைகளைக் கூறிடும் இந்நூல் 'தி. மு. க. விற்கு நாட்டுப் பிரச்சினைகள் ஏதும் தெரியாது' என்று கூறுவோருக்குப் பரிசளிப்பதற்குத் தகுந்த நல்ல நூல்! நம்மவர் கையில் இருக்கவேண்டிய கருவூலம்!

[கிடைக்குமிடம்: கலைமகள் நிலையம், 126, பிராட்வே, சென்னை-1. பக்கங்கள் 168. விலை; ரூ. 2]

பல்கேரிய நினைவுகள்

கே. அனந்தநம்பியார்

தமிழ்நாட்டுத் தொழிற் சங்கத் தலைவரான அனந்தநம்பியார் வேற்றுமொழியில் எழுதிய நூலின் தமிழாக்கம் இது. பல்கேரியா எனும் கம்யூனிஸ்ட் நாட்டின் முன்னேற்றம் பற்றி பக்கத்திற்குப் பக்கம் விரித்து விரித்துக் கூறப்பட்டிருக்கிறது. பொதுவாக வெளிநாடு சென்றவர்கள் புகழ்ந்து கூறுவதுபோல் இவரும் கூறுகிறார். ஆனாலும் இதிலே ஒரு சுவை இருக்கிறது.

"பல்கேரியாவின் ஜனத்தொகை கல்கத்தா நகரத்தின் ஜனத்தொகையைவிடச் சற்று அதிகம். அவ்வளவுதான்! அப்படியிருக்க வளம்பெற்ற ஒரு சுயாட்சி நாடாக இது எப்படி விளங்க முடிகிறது என்ற சந்தேகம் எனக்கு இருந்தது.... அந்த நாட்டில் நிலவி வரும் புதிய சமுதாய அமைப்பைப் பற்றிப் படித்தறிந்த பின்னர்தான் என் சந்தேகங்கள் பறந்தோடின!"

—இப்படிக் கூறும் நம்பியாரின் உளத்தில் நாடு முன்னேறுவது அதன் பரப்பில் இல்லை; சமுதாய அமைப்பில் இருக்கிறது என்பதையும், அதேபோல் நம் நாடு முன்னேற பரந்த, ஐக்கியமான, பெரிய, பாரத தேசம் வேண்டியதில்லை—என்றும் உணர்ந்திருந்தால் மிக நல்லது.

இந்நூலிலுள்ள மற்றொரு சிறப்பு நல்ல தமிழ்!

[கிடைக்குமிடம்: நியூ சென்சரி புக் அவுஸ், சென்னை-2. பக்கங்கள்-110, விலை: ரூ. 1.25]

கர்ப்பம் கலைந்த கதை; கண்டலா அழிந்த சேதி!

புராணம் புகலுகின்ற கதையொன்று உண்டு, கௌரவர்கள் நூறு பேர்தானா என்பதற்கு! குந்தி எனும் மன்னன் பாண்டுவின பத்தினி ஐந்து குழந்தைக்குத் தாயாகிறாள். இந்தச் சேதி நஞ்செனப் பாய்கிறது, காந்தாரியெனும் பாண்டுவின் அண்ணி காதில்! துடிக்கிறாள்; இதயம் வெடிக்கிறாள்! அப்படியென்ன அவள் வயிற்றில் ஒரு புழு பூச்சி கூட உண்டாகவில்லையோ—என்றால் உண்டு, உண்டு! பார்த்தவர் கண்டு விண்டுரைக்க முடியாதபடி கர்ப்பம் நிலைத்ததுண்டு! என்றாலும் காந்தாரி அவசரப்பட்டாள்; நேற்று வந்த மாற்றாளுக்கு மார்மீது அணைத்திடக் குழந்தை கிடைத்தது; எனக்கில்லையோ—என்று அரற்றினாள்.

மகோன்னத வளர்ச்சியை—என்றார்கள்.

கோடி கோடியாகப் பணம் கடலுக்கருகே கொட்டப்பட்டது; புதுப் புதுக் கனவுகள் பலரால் கட்டப்பட்டன!

ஆனால், அந்தோ! அந்தத் துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி நிறுத்தப்பட்டதாம்!

ஏற்றுமதி, இறக்குமதி இல்லை?

இதென்ன புதுமை! ஏற்றுமதியும் இறக்குமதியும் இல்லாத துறைமுகம் ஒரு துறைமுகமா? இதற்கான காரணம் என்ன?

'துறைமுகம் கப்பல்கள் வந்து நிற்கவும் ஏற்றுமதி-இறக்குமதி வேலை நடக்கவும் இலாயக்கில்லை' —எனக் கருதப்பட்டதாம்!

வடக்கே தொழில் பெருக வேண்டும் என்ற பேராசையும் பாக்கிஸ்தானத்திற்குக் கராச்சி போய்விட்டதே—என்ற பொறாமையும்தான் இந்த அவலத்தின மூலகாரணங்கள்!

1936 ஆகஸ்ட் திங்களில் ஒரு அறிக்கை வந்தது 'கண்டலா துறைமுகம் எதிர்பார்த்ததைவிடப் பலனளிக்கப்போகும் ஒரு மாபெரும் திட்டம்!'—என்பது அந்த அறிக்கை. அது சாதாரண மக்கள் தந்த கருத்தல்ல!

கண்டலா அபிவிருத்திக் கமிஷனர் தந்த அறிக்கை!

அபிவிருத்திக் கமிஷனரே அறிக்கை தந்துவிட்டார். இனியேது தொய்வு? கண்டலா துறைமுகம், காண்பவர் வியக்கப்போ

நீடித்த கர்ப்பத்தைக் குலைத்து விட்டால் குழந்தை கிடைக்காதோ—என்று எண்ணமிட்டாள்! குழவிக் கல்லைக் கையிலெடுத்தாள்! குழந்தை பிறக்குமென்று வயிற்றிலே குத்திக்கொண்டாள்! கர்ப்பம் குலைந்தது! கலைந்த கர்ப்பத்தை நூறு கலயங்களில் பிடித்தார்கள்! நூறு கலயங்களையும் காந்தாரி அடைகாத்தாள். கௌரவர்கள் நூறு பேர் பொரித்துத்தெழுந்தார்கள்!

காந்தாரி என்றாலே பொறாமையால் தன்னைச் சிதைத்துக்கொள்ளும் பேதை—என்னும் பொருளைத் தரும் புராணக் கதை இது! அந்தக் 'காந்தாரி' நடமாடும் காலடியோசை அண்மையில் கண்டலா துறைமுகத்தருகே கேட்டோம்!

கண்டலா துறைமுகம் ஏன் எழுந்தது? காந்தாரித்தனமான பொறாமையில் விளைந்தது! பாக்கிஸ்தான் பிரிந்ததால் அழகுத் துறைமுகம்—பல வசதி நிறை துறைமுகம் கராச்சி அந்தப் பிறைக்கொடியாளரின் கையிலே சிக்கிற்று!

ஏங்கித் தவித்த ஏகபாரத சர்க்கார் இயற்கையால் உண்டான கராச்சியைப்போல் செயற்கையால் உண்டாக்குவோம்!—என்று வீராப்புப் பேசியது; 'காந்தாரி' பாதையில் வீரநடை போட்டது!

கராச்சியை அடுத்துள்ள இந்தியப் பகுதியில் துறைமுகத்திற்கு இடம் கண்டுபிடித்தது. 'கண்டலா'—எனும் அந்த இடத்தின் நாமம் அகிலமெங்கும் ஒலிக்க ஆரம்பித்தது! அவசர அவசரமாகத் திட்டம் தீட்டப்பட்டு செயலாக்கப்பட்டது, 'காந்தாரி'யின் கர்ப்பம் சிதைக்கும் வேலையைப் போல!

கராச்சியை இழந்தோம்; இருந்தும் வலிமைசேர் தோள்களால் ஒரு புதுக் 'கராச்சியை'—கண்டலாவை உருவாக்குவோம்! 'கராச்சி தந்த நட்டத்தை இது ஈடுசெய்யும்'—என்று பெருமைப் பேரிகை அடித்து முழக்கியது, அரசு!

பிரதமர் போனார்; பரவசப்பட்டார்! பாரதத்திற்கு ஒரு புது வாழ்வு என்றார்! மந்திரிகள் போனார்கள்; மலைப்பு அடைந்தார்கள். பாரீர், இந்தியாவின்

துறைமுகம் இலாயக்கில்லையாம்!

வேலை நடக்க இலாயக்கில்லையாம்!

வேலை நடக்க இலாயக்கற்ற துறைமுகத்திற்கா கோடி கோடியாகக் கொட்டியழுதார்கள்?

கோணல் வாதங்களால் தென்னகத்தை ஏமாற்றி வரிப் பணத்தை மூட்டைக் கணக்கில் வாரியிறைத்தது இதற்குத்தானா? ஏன் இலாயக்கற்றதாகிவிட்டது இந்தப் 'புதுக் கராச்சி'?

'துறைமுக ஓரத்தில் சகதி சேர்ந்து விடுகிறதாம்! இந்தக் காரணத்தினால் எப்போதும் சகதியை வாரி அள்ளிக் கொட்டிக்கொண்டே இருக்கவேண்டியுள்ளதாம்!'

சகதி சேர்கின்ற இடத்தை ஏனய்யா தேர்ந்தெடுத்தீர்கள்? அப்படி சகதி சேர்வதாயிருந்தால் அதை அகற்றிட வழி பார்ப்பதுதானே முறைமை? அதைச் செய்தீர்களா?

'ஓ... அதற்காக ஒரு இயந்திரம் வாங்க வேண்டுமென அதிகாரிகள் பேசிக் கொள்கின்றனராம்!'

துறைமுக வேலை தடைபட்டு நிற்கிறது. கோடிக் கணக்கான ரூபாய்களின் பயன் விழலுக்கிறைத்த நீர் போலாகிவிடுமோ—என நாடு ஏங்குகிறது. இந்த நிலையில் அதிகாரிகள் எடுத்துக்கொள்கின்ற துரிதமான நடவடிக்கை என்ன?

இயந்திரம் வாங்கவேண்டுமென்று பேசிக் கொள்கின்றனராம்! — அந்தச் சொற்றொடரிலுள்ள தாமதம் இந்திய சர்க்காரின் தாமதம் முழுவதையும் சாரமாக்கிக் காட்டுவதாக அல்லவா இருக்கிறது?

பேசிக்கொள்கின்றனராம்!

இந்த வகைத் தாமதத்தையும் ஊழலையும் இதற்கு முன்பே கட்சு மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி எடுத்துக் காட்டியதாம், அரசினருக்கு! கேளாக் காதினராக இருந்த அவர்கள் இன்று சரக்கு ஏறாத, இறங்காத துறைமுகத்தைப் பார்க்கிறார்கள்!

ஏனிந்த அவல நிலை? துறைமுகம் நல்ல துறைமுகமா—என்று ஆராயாது ஏன் வேலையில் இறங்கினார்கள்?

கும் சாதனையாக மாறப்போகிறது. கடல் தாண்டி வந்தோர், கண்டம் தாண்டி வந்தோர் பார்த்துப் பிரமித்துப் பேச, அந்தப் பேச்சு பச்சைக் கொடிக்கார பாக்கிஸ்தானிகளின் காதில் வீழ்ந்து நஞ்செனப் பாய, அவர்கள் இடியோசை கேட்ட நாகம் போல் அடங்கியொடுங்கிடுவர்—என்று அரசினர் கனவு கண்டனர்.

தென்னகம் என்னும் வளம் மிகுந்த நாட்டின் வயிற்றிலடித்து அங்கு வளரவேண்டிய கைத்தொழில்களை வளரவிடாமல் நம் வடக்கிற்கே வரிப்பணத்தைக் கொண்டுவந்து இப்படி அவசர அவசரமாகத் திட்டம் போட்டு உருவாக்கிய கண்டலா துறைமுகம் வளரும்; வளர்கின்ற வடக்கிற்கு ஒரு ஒளி சேரும்—என்று வடக்கே வாழ்கின்ற மக்கள் கனவு கண்டார்கள்.

இவர்களின் கனவு பொடிப் பொடியாக்கிடப் பறந்து வந்தது ஒரு செய்தி. 'துறைமுகமே இலாயக்கில்லை' — இதுதான் செய்தி.

காந்தாரி பொறாமை கொண்டாள், மாற்றாள் பிள்ளை பெறுகிறாளே—என்று! காங்கிரசு ஆட்சியும் பொறாமை கொண்டது, கராச்சித் துறைமுகம் பாக்கிஸ்தானத்திற்குப் போய்விட்டதே என்று! காந்தாரி குழவிக் கல் எடுத்தாள், குழந்தை சீக்கிரம் பிறக்கும் வழிதேட! இவர்களும் கண்டலாவைத் தேர்ந்தெடுத்தார்கள், புதுக் கராச்சியை உருவாக்க!

வயிற்றிலுள்ள கர்ப்பத்தைக் குலைத்தாள் காந்தாரி! வரிப் பணம் கோடானு கோடியை வீணாக்கினார்கள் இவர்கள்!—இதுவரை நடந்து வந்திருக்கிற கதை இப்படி! இனி, காந்தாரி நூறு கர்ப்பக் கலயங்களை அடைக்காத்து உயிர் கொடுத்ததாகக் கதை இருக்கிறதே! இந்தக் காருண்ய சர்க்கார் அதை எப்படி நடத்தப்போகிறார்களோ தெரியவில்லை. ஒருவேளை அந்தத் துறைமுகத்திலுள்ள இரும்பு சாமான்களை 'ஈயம் பித்தளைக்குப் போட்டுப் பேரீச்சம்பழம்' வாங்குவார்களோ என்னவோ—யார் கண்டது?

—அடியார்

டி. கணேசன், ஈரோடு.

(?) மாறுபட்ட எதிர்க்கட்சிகள் எப்படி உணவுப் போராட்டத்தில் ஒன்று சேர்ந்தன?

வாய் பேதம் பேசினலும் வயிறு கேட்பது ஒன்றுதானே!

சிற்றம்பலம், காரைக்குடி.

(?) தி. மு க—வினர் அன்னக் காவடிகள்; சமுதாயத்தின் இழிந்த பகுதியிலிருந்து வந்தவர்கள் என்றெல்லாம் ஏசுகிருர்களே?

அவர்களுக்கு இந்த ஆரம்பப் பாடத்தைக் கூறும். பூச்சி வாயிலிருந்து வந்த பட்டுதான் பெண்களின் மேனியை அலங்கரிக்கிறது! தேனி உண்டு உமிழ்ந்த எச்சில்தான் சுவையான தேன்! சேற்றுத்தாமரை தான் அழகு தரும்! கோரோசனை, சவ்வாது, புனுகு— இவை பிறந்த இடத்தைக் கூறத்தான் வேண்டுமோ? பொது வாழ்க்கை பட்டு பீதாம்பரதாரிகளின் உல்லாச நேரமாக இருந்த காலம் மாறிவிட்டது என்று அவர்களின் மந்த மதியில் படும்படி கூறுங்கள், தோழரே!

சரசுவதி, பள்ளிமடை;

(?) ஏக பாரதத்திற்கு ஒரே கலாச்சாரம் உண்டா?

உண்டு என்று நிரூபிக்கத்தான் புதிதாகத் தயாரிக்கப் போகிருர்களே, 7 இலட்சம் செலவில் 'இந்தியக் கலாச்சாரக் களஞ்சியம்' எனும் புத்தகத்தை!

பார்கள், பாவம்! எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்துவிட்டனவே! ஆக, இதைப் பித்தலாட்டம்—என்று மென்று விழுங்கிக் கொண்டுதான் அவர்கள் கூறியிருப்பார்கள். பட்டினிக் கொடுமையை எதிர்த்து நடக்கப் போகும் போராட்டத்தைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. உலகம் முழுவதும் அதற்கான இயக்கத்தைத் தோற்றுவிக்கும் அவசியத்தை வற்புறுத்தி யிருக்கிருர் ஐக்கிய நாடுகள் உணவுத் துறை இயக்குநர்.

நம்பிராசன், அரக்கோணம்.

(?) காங்கிரஸ் இயக்கத்தின் வேர் எது?

வேரா? அதற்குக் கிடையாதே? வெள்ளையர் வெறுப்பு எனும் மக்கிப்போன மரத்தூளின் மீது முளைத்தெழுந்த காளான் தான் காங்கிரஸ்.

புதுமைப்பிரியன், சீரங்கம்.

(?) இந்திய அரசு எப்போது ராக்கெட் விடும்?

மேனுட்டினரெல்லாம் வெவ்வேறு கிரகங்களுக்குக் குடிபோனபிறகு!

பி. யு. தண்டபாணி, பழனி.

(?) பாரதத்தில் நாகநாடு அமையுமா?

பாரதத்தில் நாகநாடா? அது எப்படி அமையும்? வெட்டி எடுக்கப்பட்டது போக மீதி இருக்கும் பகுதிக்கல்லவா பாரதம் என்று பெயர்?

சுழல் விளக்கு

மாலுமி

டி. நடராசன், கரூர்.

(?) போலிகள் நிறைந்துவிட்டனவாமே?

சமுதாயத்தில் என்ன, அரசியல் கட்சிகளில் கூட நிறைந்துவிட்டன. அதிலும் குறிப்பாக காங்கிரசில் ஒரே போலி மயம்! பாணிப்பேட்டை எனுமிடத்தில் 250 போலிப் பெயர்கள் காங்கிரசு உறுப்பினர்களில் இருந்ததாக செய்தி வந்திருக்கிறதே!

சிக்கந்தர், கீரனூர்.

(?) சீன சிறைபிடித்த படை வீரர்களைத் திருப்பி அனுப்புகிறதாமே?

இந்தியா இனி சவக்குழிகளை வெட்டி வைத்துக் கொள்ள வேண்டியதுதான்!

சியோல், மதுரை.

(?) நீலகிரியில் பிலிம்தொழிற்சாலை ஏற்படுமா?

நம்புங்கள் என்கிருர் மாநில அமைச்சர். நம்புவது உங்களிஷ்டம் என்கிருர் மத்திய மந்திரி. நம்பினல் கெட்டீர்கள்: நடந்த கதையை மறந்தீர்களா —எனகிறது காலம்!

சுந்தரேசன், பெரியகுளம்.

(?) உணவுப் போராட்டம்—இது அரசியல் பித்தலாட்டம் என்கிருர்களே?

ஒரு தனிக்கட்சி போராட்டத்தை ஆரம்பித்திருந்தால் இந்நேரம் அந்தப் பட்டயத்தைக் கட்டி தோல்விப் பள்ளத்தில் தள்ளிவிடக் காங்கிரசார் முயன்றிருப்

நூர் முகமது, கேப்டவுன்.

(?) நிறத்திற்கென்று குணமுண்டா?

இயற்கையில் இல்லை! மதிகெட்ட மனிதர் இடையில் ஏற்படுத்திக் கொண்டார்கள். கறுப்பு நிறத்தவர் என்ருல் கறும்புகையெழும் தீய நெஞ்சத்தவராம் வெள்ளைத் தோலர்கள்தான் இந்தத் திமிர்வாதத்தின் உற்பத்தியாளர்கள்!

பி. ரங்கதுரை, மன்னர்குடி.

(?) இத்தனை எழுத்தாளர்கள் புறப்பட்டிருக்கின்றனரே இது தகுமா?

நல்ல எழுத்தாளர்கள் கிளம்புகிறவரை இலக்கியம் வளம் பெறும். மொழியின் வேர் இன்னும் ஆழமாகப் பதியும். 'இவ்வளவு எழுத்தாளரா?'—என்று தமிழகத்தைப் பார்த்து மலைக்கும் நீங்கள் ஏறத்தாழ பதினைந்துகோடி மக்களுள்ள ரஷ்ய நாட்டில் 60,000 எழுத்தாளர்கள் பத்திரிகையில் பணி புரிகின்றனர் என்ற செய்திக்கு என்ன கூறப்போகிறீரோ?

பரசுராமன், மௌளக்கூர்.

(?) வடநாட்டில் ஒரு தலைமை ஆசிரியர் பரீட்சையில் 'காப்பி' அடித்தாராமே?

வடநாட்டில்தானே? இதைவிட அதிகமான கள்ளத்தனங்களைப் பொறுப்பிலுள்ளோரிடமிருந்து எதிர்பார்க்கலாம்.

ராகவன், குடந்தை.

(?) சிந்திரி உர உற்பத்தி எப்படி நடந்து வருகிறது?

ஊழல் மிகுந்த அந்தத் தொழிற்சாலை நன்ருக நடந்தாலும் நாட்டில் சில பழக்க வழக்கங்கள் அழிகிறவரை ஒரு பயனும் இல்லை. சாணத்தைத் தட்டி, காய வைத்து எரிபொருளாகப் பயன்படுத்துகிருர்கள். இப்படி வீணுக எரிந்துபோகும் இந்த உரத்தைப் பயன்படுத்தினல் 90 லட்சம் டன் அதிக தானியம் விளையுமாம். எரிபொருளாக இந்தியாவில் இப்படி இழக்கும் உரத்தை 9 சிந்திரி தொழிற்சாலைகள் உற்பத்தி செய்தாலும் ஈடுகட்ட முடியாதாம்! சமுதாயத்தின் சில பழக்க வழக்கங்களை நீக்குவதில் கவனம் வைக்காது சிந்திரித் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதில் என்னபயன்?

(?) தமிழ்நாடு என்று பெயரிட ஏன் அனுமதிக்கவில்லை?

இதற்கு எத்தனையோ காரணங்கள் கூறினலும், மந்திரிகள் நினைத்திருப்பது வேறு. தமிழ்நாடு என்ருல் ஏதோ தனிநாடு என்று டில்லி நினைத்துக் கொண்டால் நிலைக்குமா பதவி என்ற பயத்தினல்தான் அவர்கள் 'தமிழ்நாடு' பெயர் வைக்கும் கோரிக்கையை எதிர்க்கிருர்கள். வடமாநிலங்களைப் போல 'தமிழ்ப்பிரதேஷ்'-என்று பெயர் வைக்கக் கேட்டிருந்தால் கண்டிப்பாக வைத்திருப்பார்கள்!

அந்தோனி, சேலம்.

(?) ஐசனேவர் மற்ற நாடுகளில் பேசுவதற்காக பேச்சுகள் தயாரிக்கிருரே, நம் நேரு தயாரிப்பதுண்டா அப்படி?

ஏன் நேரு தயாரிக்கிருர்? சிந்தித்து, வேற்று நாடு எனத் தெரிந்து பேசுபவருக்கல்லவா, முன் தயாரிப்பு தேவை? வாய் வந்த போக்கில் 'காட்டுமிராண்டிகள், நான்சென்ஸ்'—என்று கூறுவதற்கு முன் தயாரிப்பு அவசியமில்லையே!

தியாகராசன், ஊட்டி.

(?) தி. மு. கழகம் தேர்தலில் அடிக்கடி தோற்று போய் 'திருதிரு'—என்று விழிக்கிறதாமே?

இப்படிக் கூறியவர் தேர்தலில் தோல்வி—என்பதை அறியாதவராக இருக்கவேண்டும். அதோடு தேர்தலில் தாம் ஈடுபட்டால் 'திருதிரு'—என்று விழிக்கக்கூட கட்சிக் கண்கள் பிடுங்கப்பட்டுவிடும் என்பதை நிச்சயம் அறிந்த 'பெரியவராக' இருக்கவேண்டும்!

(?) சி. சுப்பிரமணியம் மந்திரியாயிருந்து சாதித்ததென்ன?

* எப்படி இரண்டு தடவை பதவியிலேயிருக்கலாம் என்பதற்கு முன் மாதிரியாய் இருந்தது.
* எதிர்க் கட்சித் தலைவர்களை பல பொல்லாத அரசியல் பொறிகளில் மாட்டிவைக்க நினைத்தது.
* தமிழ் நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்காதது.
* 'தமிழ்நாடு'—என்ற சொல் தமிழ் இலக்கியத்தில் இல்லை—என்று கூறியது.

சுலைமான், பசுமலை.

(?) காமராசர் சுதந்திரக் கட்சியில் சேர்வாரா?

அதற்குள்ளாகவா? அவர் இன்னும் கவர்னராகவேண்டும்! டில்லி மூலபீடத்தில் பதவி வகிக்கவேண்டும். பின்னர் ஒதுக்கப்படவேண்டும். அரசியல் துறவறம் பூணவேண்டும். மறுபடியும் பதவி அழைக்க வேண்டும். அதற்குள் பணமும் சேர்த்துவிட வேண்டும்! அதன் பின்னரல்லவா அவர் சுதந்திரா கட்சிக்குப் போவார்!

ஏன்

குறுவை நெல் அறுவடை ஆகும்! பின்னர் அரிசி விலை இறங்கும்!—கூறினர் அமைச்சர் பக்தவத்சலம். சர்க்கார் கொள்முதல் செய்யும்; சகாய விலையில் அரிசி கிடைக்கும்!—என எதிர்பார்த்தார்கள் மக்கள்!

ஆனல் நடந்தது? குறுவை நெல்லைக் கொள்முதல் செய்வதில்லை—என அறிவித்தது அரசு! ஏன்?....... மக்கள் மன்றம் எழுப்பிய முதல் குரல் இது!

"நம்முடைய அரசு ஆங்காங்கே நியாயவிலைக் கடைகள் திறந்துள்ளது. நியாய விலைக் கடைகள் திறப்பதற்கு முன்பு உணவுப் பொருள்களை வியாபாரிகள் அதிக விலைக்கு விற்றனர்; நியாயவிலைக் கடைகள் திறந்த பின்னர் அவர்களால் அதிக விலைக்கு விற்க முடியவில்லை.

"நாட்டில் இப்பொழுது உண்மையிலேயே உணவுப் பஞ்சம் இல்லை; எனினும், விலைவாசிகள் மட்டும் உயர்ந்திருக்கின்றன."

—இப்படிப் பேசியதும் பக்தவத்சலனர்தான்!

எம்கடை திறப்பதற்கு முன் அதிக விலைக்கு விற்றனர் வியாபாரிகள். இப்போதில்லை—இந்தக் கூற்று உண்மையா? குறுவை நெல் மூட்டை ரூபாய் 39 லிருந்து 44 உயர்ந்தது, ஒரு மாதத்திற்குமுன்! இப்போது மூட்டை 50-க்குமேல் பறந்து கொண்டிருக்கிறது! அமைச்சர் வாயில் இத்தகைய உண்மைக்குப் புறம்பான விஷயங்கள் வருகிறதே ஏன்.... ஏன்?—மக்கள் மன்றம் எழுப்பிய இரண்டாவது குரல் இது.

உணவுப் பஞ்சம் இல்லை; ஆனல் விலைவாசி உயர்ந்திருக்கின்றன! கையுக்கு எட்டாத தொலைவிலே பொருட்கள் இருப்பதற்குப் பெயர் பஞ்சமல்லவா? ஒரு வேளை அமைச்சர் பஞ்சம் என்றதும் வங்காளத்தில் மக்கள் மந்தையென மாண்டு மடிந்து கிடந்தனரே அதை நினைவூட்டிக் கொண்டார் போலும்!

இதே நிலை நீடித்தால் மந்திரி எண்ணும் அதே பஞ்ச நிலை வருவது உறுதி. அந்த அழிவைத் தடுக்க அமைச்சருக்கு நல்ல எண்ணம் உண்டா? ஈரநெஞ்சு உண்டா?

உண்டென்ருல்—கவைக்குதவாத வாதங்கள் ஏன்? கடைச் சரக்காக்கி விற்க வேண்டிய கேலிக் கதைகள் ஏன்? கண்மூடி உறங்கும் உங்கள் செயலின்மைதான் ஏன்?

ஏன்?...ஏன்?...

கீர்த்தி முடியில் உலவினான்; கல்லறைகளுடன் குலவினான்!

மனிதனின்...

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

சட்டப்படி ஆள்வதாக அம்மக்களுக்கு வாக்களித்துப் படையொன்று திரட்டினன். 1815--ல். நடந்த வாட்டர்லூ சண்டையில் நெப்போலியன் மீண்டும் முறியடிக்கப்பட்டான். எவ்வளவோ திறமையாகப் போர் நடத்தியும் சந்தர்ப்பங்கள் அவனுக்கெதிராகச் சதி செய்துவிட்டன. இம்முறை அவன் தப்பி வரமுடியாமல் பலத்த ஏற்பாடுகளுடன், வெகு தொலைவிலுள்ள ஆப்ரிக்கத் தீவான செயின்ட் ஹெலினாவில் அவனை சிறை வைத்தனர். நிராதரவான அந்தத் தீவில் வீரர்களுக்குள் ஒரு வீரனாக விளங்கிய மாவீரன் நெப்போலியன், ஐந்தாண்டுகள் கூண்டிலடைக்கப்பட்ட சிங்கம்போல் உலவி, புற்று நோயால் பீடிக்கப்பட்டு 1815—ல் இறந்து போனான். பிரான்சு நாட்டில் மன்னர்கள் சில காலம் ஆண்டார்கள். மீண்டும் பிரான்சு குடியரசு முறையை மேற்கொண்டது. அதற்குப்பின் இன்றுவரை அது குடியரசாகவே இருந்து வருகிறது.

நெப்போலியன் சிறந்த போர் வீரன் மட்டுமல்ல; மதி நுட்பம் மிகுந்த நிர்வாக மேதை; ஒப்பற்ற ராஜதந்திரி. அவனுடைய ராணுவ அறிவின் பிரகாசத்தில் மெய்மறந்த வரலாற்று ஆசிரியர்கள், அவனுடைய இதர ஆற்றல்களுக்குப் போதுமான நீதி வழங்கவில்லை என்றே நான் கருதுகிறேன். அமைதியாக ஆட்சி செய்யும் வாய்ப்பை அவன் பெறவே இல்லை. அந்த நிலையிலும் போர்க்களங்களில் இருந்தபடியே கல்விப் புணரமைப்புக்கு அவன் திட்டங்கள் தீட்டி அமுல் நடத்தச் செய்திருக்கிறான். பாரிஸ் நகரில் அவன் வெற்றிகளின் நினைவாக பல அழகுக் கட்டடங்களைக் கட்டி அழகுபடுத்தினான்.

ஸீன், ரைன் நதிகளின் குறுக்கே பாலங்கள் பல அமைத்ததோடன்றி, ஆல்ப்ஸ் மலைகளின் குறுக்கே பாதைகள் போட்டான். எல்லாவற்றுக்கும் மேலாக அவனுடைய மிகப் பெரிய சாதனையாகக் கருதப்படவேண்டியது, பிரஞ்சு சட்டங்களை எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக்கித் தொகுத்து வெளியிட்டதுதான். பிரபல ஆங்கில வரலாற்றுப் பேராசிரியர் ஹாலண்டுரோஸ் ரோமானிய சட்டத் தொகுப்பை ஜஸ்டினியன் செய்தபிறகு, சட்ட வரலாற்றில் நெப்போலியனின் முயற்சி பெரிய சாதனை என்று எழுதுகிறார். நெப்போலியனின் சட்டத் தொகுப்பை "சமுதாய வேதம்" என்றே அவர் குறிப்பிடுகிறார். எகிப்துக்குச் சென்றபோது சூயஸ் பிராந்தியத்தில் கால்வாய் வெட்டும் யோசனையை நெப்போலியன் கூறினாம். அவனுடைய தீர்க்கதரிசன சிந்தனைக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

நெப்போலியன் சிறந்த சிந்தனையாளன் என்பதைக் கீழ்க்கண்ட அவனுடைய வாசகங்களிலிருந்து நீ அறியலாம்:

"தைரியம் காதலைப் போன்றது. நம்பிக்கையில்தான் அது வாழமுடியும்!"

"யுத்தங்களை நான் என் கண்களால்தான் வென்றேனே தவிர கருவிகளால் வெல்லவில்லை!"

"வெல்வெட் கையுறையணிந்த இரும்புக் கரங்களால்தான் மனிதன் அழைத்துச் செல்லப்பட வேண்டும்."

"உலகில் இரண்டு சக்திகள் தான் உள்ளன. ஒன்று கத்தி; மற்றொன்று ஆத்மா. காலப் போக்கில் ஆத்ம பலம் கத்திப் பலத்தை வெற்றி கொள்ளும் என்பது உறுதி!"

"போகப்போக யுத்தம் என்பது அர்த்தமில்லாத விஷயமாகிவிடும். கத்தியாலும் துப்பாக்கியாலும் வெற்றி பெறமுடியாத காலம் ஒன்று வரும்!"



காதலி ஜோசஃபைன்

"ஐரோப்பாவை பலம் கொண்டு பணிய வைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் நான் இருந்தேன். ஆயுத பலத்தைவிட அறிவு பலத்தால் மக்களை நம் வழிப்படுத்துவதே சிறந்த முறை!"

"நான் அதிகாரத்தை மிகவும் விரும்புகிறேன். உண்மை! ஆனால் எப்படி? இசைக் கலைஞன் தன் இசைக் கருவியை நேசிப்பதெல்லாம் இன்பமான இசை எழுப்பத்தானே?"

ஆம் மாதவி, நெப்போலியன் அதிகாரத்தை லட்சியமாகக் கொள்ளவில்லை. தன் லட்சியங்களையடைய அதை ஒரு கருவியாகவே கருதினான் என்பது அவனுடைய வாசகங்களிலிருந்து தெளிவாகிறது. ஆயுத பலத்தில் அவன் பூரண நம்பிக்கை வைக்கவில்லை. அறிவு பலத்தையும் ஆத்மீக பலத்தையும் அவன் மதித்தான். அவன் வாழ்க்கையின் அஸ்திவாரமாக விளங்கியதே நம்பிக்கைதான். வானிடிந்து விழுந்தாலும் பிரஞ்சு வீரர்களின் ஈட்டிமுனை அதைத் தாங்கி நிறுத்திவிடும் என நம்பியவன் அவன். 'முடியாது' என்ற சொல் முட்டாள்களின் அகராதியில் காணப்படுகிறது என்று கூறியவனும் அவனே.

ஐரோப்பா ஒரு சமஷ்டியாக ஆகவேண்டுமென அவன் ஆசைப்பட்டான் என்றால், அவனுடைய ராஜீய அறிவு எவ்வளவு முதிர்ந்த நிலையில் இருந்திருக்க வேண்டும்?

மதத்தை அவன் நம்பவில்லை. மோட்ச சாம்ராஜ்யத் தத்துவங்களை முழுமனதுடன் வெறுத்தான். வாழ்க்கையில் தான் காதலித்த ஒரே பெண் தன் முதல் மனைவியான ஜோசஃபைன்தான் என்று அவனே கூறியுள்ளான். மாவீரன், ராஜதந்திரி, நிர்வாக மேதை, இலக்கிய கர்த்தா (ஜோசஃபைனுக்கு அவன் எழுதிய கடிதங்களில் இலக்கிய மணம் கமழ்கிறது என்பது விமர்சகர்களின் கருத்து) இப்படி முழுமை பெற்ற மனிதனாக நெப்போலியன் வாழ்ந்தான். வெறும் போர்வீரனாக மட்டும் அவனைப்படம் பிடிப்பது அவனுடைய ஆற்றலுக்கு இழைக்கும் அநீதியாகும்.

"ஐரோப்பாவுக்கும் மனித நாகரிகத்துக்கும் பெருந்திங்கிழைத்த அழிவு வேலைக்காரன்" என்று நெப்போலியனைப்பற்றி சிந்தனையாளர் எச். ஜி. வெல்ஸ் குறிப்பிடுகிறார். பேரறிஞர் வெல்ஸின் கருத்துக்குச் சிரம் தாழ்த்தி, நான் மாறுபட வேண்டியவனாக இருக்கிறேன். "கறுப்புத் தேவதை" என வரலாறு அவனை அழைத்தாலும், அவன் நெஞ்சத்தில் சுடர்விட்ட எண்ணங்கள், தீர்க்கதரிசனமுள்ள சிந்தனைகள்—என்னை ஈர்க்கின்றன. சாம்ராஜ்யம் நிறுவ முயன்ற எத்தனையோ பேரை வரலாறு மன்னித்துப் புகழ்ந்திருக்கிறது. நெப்போலியனை விலக்காக்க வேண்டியதில்லை. அவனுடைய சாம்ராஜ்யக் கனவுகள் சிதைந்தாலும் இதர சாதனைகள் உலகம் உள்ள அளவும் அவன் பெயரைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

அன்புள்ள,

அகத்தியன்

★

நவாப் புலம்பல்!

✻

சென்னை ஒற்றைவாடையில் இப்போது ஒரு நாடகம் நடக்கிறது.

அந்த நாடகக் கம்பெனி நடத்தும் ஒவ்வொரு நாடகமும் கடவுளின் பெருமை பேசுபவை. காட்சிக்குக் காட்சி பக்திரசம் வழியும். விஞ்ஞானப் பெருமைபேசும் இருபதாவது நூற்றாண்டா நாம் இருப்பது எனும் பிரமை தோன்றும்! அவ்வளவு 'தத்ரூபமான' புராண வசனங்கள். புளகாங்கிதம் எடுக்கச் செய்யும் கந்தர்வ கானங்கள்!

இத்தனையும் இருந்தென்ன? அந்த நாடகக் கம்பெனியின் உரிமையாளரும், புராண நாடகத்தில் வில்லன் வேடம் தாங்குபருமான நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை பேசுவதைக் காணுங்கள்:

"ஐயோ! சினிமாக் கொட்டகையில் கூட்டம் 'சேர்கிறதே! மழையென்றும், வெய்யிலென்றும் பாராது டிக்கட் வாங்க வரிசை வரிசையாக நிற்கிறார்களே!" ஏன் இந்தப் புலம்பல்? தன் நாடகத்திற்கு இரண்டாவது மணி அடித்தும் ஆளைக் காணோமே என்ற ஏக்கம்தானே?

அதற்கும் இடங்கொடுக்காது பேசுகிறார் பாருங்கள்: "இந்தக் காலத்தில் புராண நாடகத்தை 130 நாட்கள் நடத்தி விட்டேன் பாருங்கள்!"

பேசியதிலிருந்துதான் தெரிகிறதே எப்படி 130 நாள் ஓடியிருக்குமென்று? ஒரு ஆள் இரண்டு ஆள் என்று விரல்விட்டு எண்ணிக் கொண்டுதானே இருந்திருப்பார்?

அந்தோ பரிதாபம்! இக் 'கற்கால'ப் பெரியவர்களுக்கு ஏன் இந்தப் பொல்லாப்பு வேலைகள்?

வீராப்பு மத்தாப்பு!

✻

தேனாறு ஓடும்; பாலாறு பெருக்கெடுக்கும். வீட்டுத் திண்ணையிலிருந்தே பாலையும், தேனையும் வள்ளத்தால் எடுத்துக் கொள்ளலாம் — என்று வாக்குறுதி கூறினார்கள்; மக்கள் ஓட்டுத் தந்தார்கள்.

பாலும் ஓடவில்லை. தேனும் பாயவில்லை! மக்கள் ஏமாற்றமடைந்தார்கள்; காங்கிரஸ் என்றாலே முகத்திலே 'கருமேகம் படர்ந்தது.

மறுபடியும் தேர்தல்! புதுவழி வகுத்தார்கள், அண்ணலடியார்கள்! வெறும் பேச்சிலே வாக்குறுதியல்ல; ரூபாய் நோட்டோடு வாக்குறுதி தந்தார்கள். மறுபடியும் அரியணை ஏறினார்கள். வாக்குறுதியை வாடைக் காற்றிலே பறக்க விட்டார்கள்.

மறுபடியும் உபதேர்தல் வந்துகொண்டேயிருந்தன. இந்தத் தேர்தலில் எந்த ஆயுதத்தைப் பயன்படுத்துவது? கூடிப் பேசினார்கள்; தேடிப் பிடித்தார்கள் ஒரு புது ஆயுதத்தை!

'வாக்குறுதி தரமாட்டோம். தந்தால் அதைச் செய்யாது விடமாட்டோம்! ஆனால் இது தேர்தல் காலம் ஆகவே, வாக்குறுதி இல்லை!'

வாக்குறுதி தந்தால் காப்பாற்றவேண்டுமே? காப்பாற்றாவிட்டால் எதிர்க்கட்சிகள் சும்மா இருக்குமோ? மக்கள் தான் வாளாயிருப்பார்களா?-என்றெண்ணித்தான் இப்படிப் பேசியிருக்கிறார்கள்.

—இந்த 'வீராப்பு' மத்தாப்பைக் கொளுத்திப் பிடிக்கிறார்கள்! இதற்காவது ஓட்டு வந்து விழுமா—என்று விழிகளை அகல விரித்துப் பார்க்கிறார்கள்!

★ சதித் திட்டமா; பழிவாங்கும் பண்பா?

★ அஞ்சலகங்களைக் கொளுத்தியோரே...

★ இந்த அவலம் துடைக்க வழி செய்வீர்!

ஆறு வீடுகளைக்...

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

தலையெடுக்க ஒட்டாது தடுக்கின்ற சூழ்ச்சி என்பதா?

"இப்போதாவது புரிந்து கொள்ளுங்கள்; சர்க்காருக்கு 'ஜே' போடத் தெரியாவிட்டால் இதுதான முடிவு!" — என்று மறைமுகமாகத் தரப்படுகின்ற அபாய எச்சரிக்கை எனச் சொல்வதா?

இத்தனைக்கும் அந்த முகவரியிலே சிறிதளவும் தவறில்லை; இப்படியேதான் எல்லா இதழ்களுமே அனுப்பப்படுகின்றன. விற்பனையாளர்களுக்கு அனுப்பப்படும் கட்டுகளைச் சோக்க அஞ்சலகத் தோழர்கள் அவர்களின வீடு தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை; அஞ்சல் நிலையத்திற்கு விற்பனையாளர்கள் நேரில் போய்தான் வாங்கிக் கொள்ள வேண்டும்—இப்படிச் சட்டம் உண்டு. இருந்தும் இந்த வெட்கக்கேடான நிலையை சந்தித்துத் தீரவே வேண்டியிருக்கிறது.

இதுகுறித்து அஞ்சல் நிலையத் தலைமை அதிகாரியுடன் அலுவலகத்தவர் போராட்டம் நடததாமலும் இல்லை. பலமுறை முறைப்படியும், ஆதாரத்துடனும் புகார் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி அனுப்பப்படுகின்ற கடிதங்களுக்கு ஒருமாதம் கழித்து கீழ்க்கண்டபடி பதில் வரும்:

"உங்கள் ....தேதியிட்ட கடிதம் கிடைத்தது. அதில் கண்டுள்ள விபரங்கள் பார்வைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன."

இதுதான் முதற் கடிதம். பின், மறு கடிதம் கிடைப்பதற்கு, மீண்டும் ஒருமாத காலம் காத்திருக்க வேண்டும். கடைசியில் வேடிக்கையான காரணம் ஒன்றைச் சுமந்து கொண்டு இரண்டாவது பதில் கடிதம் கிடைக்கும்.

"உங்கள் புகார் குறித்து விளக்கமான விசாரணை செய்தோம். அந்த விசாரணையில் பத்திரிகை தாமதமாகச் செல்வதற்கு, ரயில்களின் போக்குவரத்துத் தாமதமும், தவிர்க்க முடியாத அலுவலகச் சூழ்நிலைகளும் காரணங்களாக எங்களுக்குத் தெரிகிறது. உங்கள் முத்திரை பதிந்த பத்திரிகை உறைகள் இததுடன் திரும்பி வருகின்றன. உங்களுக்கு ஏற்பட்ட வசதிக் குறைவுக்கு மிகவும் வருந்துகிறோம்."

—இதுபோன்ற பதில்கள் பல 'முரசொலி'க்குக் கிடைத்திருக்கின்றன. ஆனால், நிலைமை என்னவோ சிறிதும் சீர்படவே இல்லை.

புகார் செய்தும் பலனில்லை. 'அழாதே, அழாதே' என்று குழந்தைக்கு மிட்டாய் வாங்கிக் கொடுத்தபடியே முதுகில் கிள்ளிக் கொண்டிருந்தால்....? அதுபோல், ஆறுதல் கடிதங்களைப் பெற்ற அலுவலகம், குறை சிறிதும் நீங்கப் பெறவில்லை; குவிகின்ற கண்டனக் கடிதங்களும் குறையவில்லை!

வேறு வழியே புலப்படாமல் ஒருமுறை 'முரசொலி' 23—10—59 இதழில் கீழ்க்கண்ட செய்தி ஒன்று வந்தது.

> ### "அந்தோ — அஞ்சல் நிலையமே!
>
> வியாழன் அன்று அனுப்பப்படும் 'முரசொலி' தனிப் பிரதிகள் சந்தாதாரர்களுக்கு வெள்ளியன்று கிடைப்பதில்லை. சனிக்கிழமையும் போய்ச் சேருவதில்லை. திங்கள், செவ்வாய் கடந்து புதனன்றுதான் பல ஊர்களுக்குக் கிடைத்து வருகிறது. இந்த நிலை, வேறு கட்சிப் பத்திரிகைகளுக்கு இல்லை.
>
> இதுபற்றி மேலதிகாரிகளுக்குப் பலமுறை எழுதியும், இன்றுவரை வழி கிடைக்கவில்லை; சரியான பதிலும் பெற்றேமில்லை!
>
> வேண்டுமென்றே செய்யப்படும் இந்த அநியாயத்தைக் கண்டித்து விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.
>
> வாசகர்கள் பொறுத்தருள்க!
>
> —ஆசிரியர்"

—இந்த அறிக்கை பத்திரிகையில் வெளியிடப்பட்ட மறுவாரத்தில்—அதாவது 29—10—59 அன்று சர்க்கார் செய்தி இலாக்காவிலிருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. தபாலின் தாமதத்திற்கு அதிலே பல காரணங்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

தலைமை அதிகாரியின் வேண்டுகோள்:

வர்த்தக ஸ்தாபனங்களும் பொது மக்களும் கடைசி நேரத்தில் கடிதங்களைத் தபால் நிலையங்களில் ஒரே மொத்தமாகக் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். அதனால் அவை நிலையங்களிலிருந்து வெளியே அனுப்புகிற நேரத்தில் நெருக்கடி ஏற்பட்டு, அவைகளில் சில தபால்கள் தங்கிவிட நேருகிறது. அதோடு, அந்தக் கடிதங்கள் அவசர அவசரமாக வெளியே அனுப்பப்படுவதால் அவைகள் தவறுதலாகவும் "சார்ட்" செய்யப்படுகின்றன. ஆகவே, அத்தகைய சிரமங்களைக் குறைக்க வேண்டுமானால், அவர்கள், கடிதங்களை ஒரே சமயத்தில் மொத்தமாக அனுப்பாமல், அவ்வப்போது சேரச் சேர தபால்களை நிலையங்களில் ஒப்படைக்க வேண்டுமென்று பொதுமக்களை சென்னை போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் கேட்டுக்கொள்கிறார்.

—ஒரே மொத்தமாக தபால்களைச் சேர்ப்பதுதான் தாமதத்திற்கான காரணம் என்று அதிலே காணப்பட்டது. வாதத்திற்காகவே அதை ஒத்துக் கொண்டாலும்கூட ஒரு நாள் அல்லது இரு நாட்கள் தாமதமாகலாம். ஆறு நாட்கள் தாமதத்திற்கு இதுபோன்ற பதில்கள் எப்படிச் சரியாக முடியும்? 'இந்த இழிவு நீங்க என்ன செய்வது?' என்பதற்கு நேர்மையான பதில் ஒன்று இருக்கிறதென்றால் அது இதுதான்:

நிர்வாக இயந்திரத்திலே ஒட்டிக்கொண்டிருக்கிற பொறுப்பின்மை என்ற துருவை அகற்ற வேண்டும்; இல்லையேல் இந்த நாட்கள் கணக்கிலுள்ள தாமதம் மாதக் கணக்கில் — ஆண்டுக் கணக்கில் நீண்டுகொண்டே சென்றாலும் அதிலே வியப்பில்லை!

சர்க்காரின் நடவடிக்கைகள் எல்லாவற்றிலுமே ஊழல் மலிந்து கிடப்பதை நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். கோடி கோடியாக ஏழைகள் கொட்டிக் கொடுக்கின்ற தொகை, பாழாகும் கொடுமை கண்டு குமுறி நிற்கிறார்கள். ஆட்சிபீடத்தின் அந்த அரிய திருப்பணியிலே அஞ்சல் துறையின் பங்கு இதுவா — என்று கேட்கிறார்கள் அவர்கள். ஆமாம்; நிர்வாகக் குறைபாடு பொதுமக்களுக்கும் உண்மை ஊழியர்களுக்கும் இடையே நிலவுகின்ற உறவை முறித்துவிடலாம்; தொழிலாளத் தோழர்களின் சேவை மதிப்பற்றுப் போகலாம்.

அஞ்சல் நிலையங்களைக் கொளுத்தி அரியணை ஏறியவர்கள் இந்த அஞ்சல் நிலையக் கோளாறுகளைக் கவனிப்பார்களா?

∴

—சொர்ணம்

கலப்படம்...

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

முதற்கொண்டு தண்ணீர் பிரச்சினைவரை எல்லாம் வடக்குப் பகுதியில்தான் அடிபடுகிறதே தவிர தென்னகத்திற்கு முதலிடம் உண்டா? ஹூஹும்...இல்லவே இல்லை! இதைப் பெருமூச்சுடன் சொல்லவேண்டியிருக்கிறது. எங்கள் பெருமூச்சு நிற்கும் காலம் எப்போதோ?

உங்கள் அடிமைகளைப்போல்
நடந்து கொண்டிருக்கும்,
மாநில மந்திரி

❋

இந்திய மண்டலேசுர பூபதி ராஜாதிராஜ நேருவுக்கு கவிராஜ 'இந்திப் பிரியா' எழுதிய சீட்டுக் கவி—

முன்னவனே இந்தி
முகத்தவனே-வடக்கே நலம்
சொன்னவனே 'காமன்வெல்'த்
தானே—மன்னவனே!
மேருவை வென்ற தமிழினை
வென்றவனே
நேருவே வாழ்க நீ!

இந்தி இந்தி இந்தீ!
இந்'தீ' பட்டால் போதும்—
எந்த மொழியும் கருகும்!
அந்த மொழியின் காவலா!
நான் சென்னின் நாவலா!
சிநேகிதப் பழம் டைரியே!
சீனவின் புது வைரியே!
பஞ்சசீல வாரிசே!
பஞ்ச தேசத் தரசே!
வாழ்க வாழ்க வாழ்கவே!
வாழ்க வாழ்க வாழ்கவே!

வடக்கு வளர்கிறது

மொழித்துறை மோசடி!

"அமைச்சர்களே! அறிவுடையோரே! அகிம்சா புத்திரர்களே! வடக்கை வளர்க்கும் மகானுபாவர்களின் சதிகளைக் காணீர்! ஆதாரத்தோடும், புள்ளிவிபரத்தோடும் காணுகின்ற அக்கிரமத்தைக் கேளீர்!" என்று எத்தனைதான் எடுத்துச்சொல்லி என்ன பயன்? பொய்யுரைகளால் அத்தனையையும் வளைத்துப் போடுகின்ற அரியணைச் சொந்தக்காரர்களுக்கு தெளிவு இல்லை; தாம் பிறந்த மண் என்ற பற்று இல்லை; அது மண்மேடாக ஆக்கப்படுகிறதே என்ற உணர்ச்சியில்லை!

தெற்கு புறக்கணிக்கப்படுகிறது என்பது அரசியல் துறையில் மட்டுமல்ல; தொழில் துறையில் மட்டுமல்ல; தாயுக்கு ஈடான தாய்மொழியும் அவர்களால் அவமதிக்கப்படத்தான் செய்கிறது.

வட்டார மொழிகளை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய விஞ்ஞான கலாச்சார காரியாலயத்தின் திட்டப்படி அந்தந்த மாநிலத்திற்கு மானியங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதன்படி இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் தமிழகத்திற்குக் கிடைத்திருப்பதோ மிகமிகக் குறைவு! கண்களைக் குளமாக்கும் அந்தக் கணக்கு இதோ:

பம்பாய் மாநிலத்திற்கு	ரூ.	54,000
மேற்கு வங்காளத்திற்கு	ரூ.	50,070
ராஜஸ்தானத்திற்கு ...	ரூ.	39,160
ஒரிசாவிற்கு ...	ரூ.	36,000
டில்லிக்கு	ரூ.	21.000
அஸ்ஸாமிற்கு	ரூ.	20,000
மணிப்பூருக்கு	ரூ.	18,000
தமிழகத்திற்கோ ...	**ரூ.**	**6,000**

வடக்கத்தி மொழி வளர வாரி வழங்குபவர்கள், தமிழகத்தை மட்டும் கடைசியிலே ஒதுக்கியிருக்கிறார்கள். மொழிப் பற்றும், தாயகப் பற்றும் இல்லாத இங்கிருக்கும் 'தலையாட்டி'கள் மௌனம் சாதிக்கிறார்கள், வழக்கம்போல்!

புலித்தேவனா? கட்டபொம்மனா?

'வீரம் எத்தகையது? எத்தகைய வீரம் போற்றுதற்குரியது? ஜாதி வித்யாசம்போல இவன் வீரம் புகழத்தக்கது; இவன் வீரம் இகழத் தக்கது—என்கிற பேதம் இருக்கிறதா?

—இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்கும் வகையில் சென்ற கிழமை சென்னை எல்பின்ஸ்டன் தியேட்டரில் 'தி ஒன் தட் காட் அவே' (தப்பி ஓடியவன்!) என்கிற ஆங்கிலப் படம் திரையிடப்பட்டது.

அந்தப் படத்தின் கதை இது:

யுத்த காலம்; இங்கிலாந்தில் ஒரு ஜெர்மானிய ஆகாய விமானம் சுட்டு வீழ்த்தப்படுகிறது. அந்த ஜெர்மன் விமானியை ஆங்கிலச் சிப்பாய்கள் கைது செய்கின்றனர்.

அதிகாரிகள் அவனுக்குத் தெரிந்த ரகசியத்தை வெளியிடுமாறு வற்புறுத்துகின்றனர். அந்த ஜெர்மானியனோ வாயைத் திறக்க மறுக்கிறான். அவன் பேசியதெல்லாம் இவைதான்; "என்னைத் தனியாக அடைத்து வைக்காமல் போர்க் கைதிகள் முகாமிற்கு அனுப்புங்கள். என் நாட்டவர்களோடு நான் இருக்கிறேன்."

—அதிகாரி அவன் கோரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை.

ஜெர்மானியனுக்குக் கோபம் கொந்தளிக்கிறது. "எப்படியாவது உங்கள் கட்டுக்காவலிலிருந்து நான் தப்புகிறேன்." —என்று சபதம் செய்கிறான், அந்த ஜெர்மானியன்!

அவ்வாறே அந்த ஜெர்மானியன் தப்புகிறான். ஒரு முறையல்ல; இரு முறையல்ல; மூன்று முறை!

முதல் இருமுறை அவன் அகப்பட்டுக் கொள்ளுகிறான். இறுதியில் ஆங்கில அரசாங்கம் அவனையும் அவனது கோஷ்டியாரையும் கானடா நாட்டிற்கு அனுப்பி வைக்கிறது.

அப்போது அவன் ஓடிக்கொண்டிருந்த ரயிலிலிருந்து தப்புகிறான். பனியிலும் குளிரிலும் கால்கடுக்க நடந்து, நடுநிலை நாடான அமெரிக்காவிற்குச் செல்கிறான்!

அங்கிருந்து முதலில் அவன் சபதம் போட்ட ஆங்கில அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதுகிறான்.

நமது படங்களிலே கதாநாயகன் வில்லனுக்கு நாமம் போட்ட காகிதத்தை அனுப்புவானே அதுபோல, "எப்படி என் திறமை!" என்று அவன் எழுதி ஆங்கில அதிகாரிகளைக் கேலி செய்கிறான்.

அந்தப்படம் முழுவதும் எப்படி ஒரு ஜெர்மானியக் கைதி ஆங்கில அதிகாரிகளிடமிருந்து தப்பினான் என்கிற வீர காவியம் தான்!

—இந்தப் படத்தை எடுத்து ஜெர்மானியரின் வீரத்துக்குப் பாயிரம் பாடியது யார் என்று நினைக்கிறீர்கள்?

ஒரு ஜெர்மானியப் பட நிறுவனம் தங்கள் சகோதரர்கள் வீரத்தை இப்படித் திரைக் காவியமாக்கியிருக்கிறது என்றுதானே நினைக்கிறீர்கள்?

—அதுதான் இல்லை.

ஆங்கிலேயருக்கு நாமம் போட்டு ஓடிச் சென்ற இந்த வீரனின் வரலாற்றை எடுத்திருப்பவர்கள் ஆங்கிலேயர்கள்! பிரிட்டனின் பெரிய பட நிறுவனமான ஆர்தர் ராங்க் ஸ்தாபனத்தார்!

தங்கள் இனத்தைக் கேலி செய்தவனின் படத்தை இவர்கள் ஏன் எடுத்தார்கள்?

இதில் வேடிக்கை என்னவென்றால் அந்தப்படத்தில் ஜெர்மானிய வீரனாக நடித்தது ஒரு ஆங்கில நடிகன் அல்ல; ஜெர்மானியன் ஒருவனையே அழைத்து வந்து அந்தப் படத்திலே நடிக்க வைத்தார்கள்!

—இப்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

இந்த ஆங்கிலேயர்களுக்கு வெட்கம் மானம் இல்லையா? ஜெர்மனிக்காரர்கள் இப்படி ஒரு படம் எடுத்து வெளியிட்டாலும் அதைத் தடை செய்ய வேண்டியவர்கள் இப்படி ஒரு இழிதகை செயலில் இறங்கலாமா?

—அவசரக்காரர்கள் இப்படித் தான் கேட்பார்கள்!

ஆனால் ஆங்கிலேயர்கள் இந்தப்படத்தை எடுத்ததனால் எந்த வித அவமானமும் அடையவில்லை!

அதிகார வெறிக்குப் பெயர் போன ஆங்கிலேயர் பாதுகாப்பிலிருந்தே ஒருவன் தப்பியிருக்கிறானென்றால் அவன் எவ்வளவு பெரிய வீரனாக இருக்க வேண்டும்?

அப்படிப்பட்ட வீரசாகசத்தைச் செய்தவன் யாராயிருந்தால் என்ன; அதைப் போற்றுவது தானே அறிவுடைமை?

வீரத்திற்குரியவன் எதிரியென்றால் அவன் செய்ததை அபத்தம் என்று வாதிக்க வேண்டுமா?

—இந்த நோக்கத்தோடுதான் ஆங்கிலேயர்கள் இந்தப் படத்தைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள்.

எதிரியும் போற்றுதற்குரியவன், அவன் வீரனாக இருந்தால்!

—இந்தப் படம் போதிக்கும் நீதி இதுதான்!

ஆனால் நமது நாட்டிலோ இத்தகைய பண்பு வளர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. இதற்கு உதாரணம் கட்டபொம்மன்—புலித்தேவன் சர்ச்சை!

அயல்மொழிக் காரனென்றால் அவன் வீரத்தைக் கோழைத்தனம் என்று கூறவும் சிலர் தயங்குவதில்லை.

சிலர் கூறுவதுபோலவே கட்டபொம்மன் தெலுங்கனாகத்தான் இருக்கட்டுமே; தமிழன் என்கிற புலித்தேவனது வீரத்தைப்போல் அவனது வீரமும் ஏன் புகழப்படக் கூடாது?

நம்மைப் பொறுத்தவரையில் இந்த விவாதத்திற்கே இடமில்லை; கட்டபொம்மன் தெலுங்கனாகத்தான் இருக்கட்டுமே! அப்போதும் அவன் புலித்தேவனைப் போல் திராவிட மகனாகத்தான் நம் கண்களுக்குக் காட்சி தருகிறான்.

எல்லாவற்றிற்கும் மேலாக உயர் நாகரிகப் பண்பு மாற்றானின் வீரத்தையும் போற்றவேண்டும் என்று கூறுகிறது.

வெள்ளையன் நமக்குப் பல கொடுமைகளைச் செய்திருந்தாலும் சில நன்மைகளையும் செய்திருக்கிறான். அவன் கொடுத்து விட்டுப்போன ஆங்கிலக் கல்வி நமது அறிவுப் பாதையைப் விசாலமாக்கிற்று. அதுபோலவே சமீபத்தில் வெளிவந்திருக்கும் இந்தப் படம் மீண்டுமொரு உன்னதமான உண்மையைத் தான் கோடிட்டுக் காட்டுகிறது:

"மனிதா வீரத்தைப் போற்று;
அது எதிரியிடமிருந்தாலும் போற்று!"

படப் பிடிப்பில் எம். ஜி. ஆர்!

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டபோது தமிழகமே தத்தளித்தது; அவர் உடல் நலம் பெற்று பட உலகில் பெருநிலவாய் மீண்டும் பவனிவரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்தது.

இப்போது அந்த நல்லநாள் வந்து விட்டது. பூரண குணம் பெற்ற புரட்சி நடிகர் மீண்டும் பழைய பொலிவுடன் இனியும் புதிய வெற்றிகளைக் குவித்திட **நவம்பர் 19-ம் நாள்** முதல் படப்பிடிப்பில் கலந்து கொள்கிறார்.

அன்று அவர் பங்கேற்று நடிக்கும் படம், அறிஞர் அண்ணாவின் அருமைக் கதையான "தாய் மகளுக்குக் கட்டிய தாலி"யாகும். தோழர் அரங்கண்ணல் வசனம் எழுத, நண்பர் ஆர். ஆர் சந்திரன் டைரக்ட் செய்யும் இந்தப் படம் விரைவில் பவனி புறப்பட இருக்கிறது.

*

பார்த்திபன் கனவு

வெகு நாட்கள் தயாரிப்பில் இருந்த படமும், பெருங் கதையாசிரியர் கல்கி' எழுதிய வரலாறு கலந்த கற்பனைக் கதையுமான 'பார்த்திபன் கனவு' ஜனவரி திங்களில் வெளிவர ஜூபிலி பிலிம்சார் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர். ஜெமினி கணேசன், வைஜயந்தி மாலா, எஸ். வி. ரங்கராவ் முதலியோர் நடிக்கும் இப்படத்திற்கு விந்தன் வசனமெழுத, யோகானந்த் டைரக்ட் செய்கிறார்.

மு. கருணாநிதி நிகழ்ச்சிகள்

★

நவ—21. உடுமலைப்பேட்டை
„ 22. மாலை—பாலக்காடு
இரவு—கொடுவாயூர்



ஜி. கே. புரொடக்‌ஷன்ஸ் தயாரிக்கும் 'சகோதரி' படத்தில் சந்திரபாபுவின் புதிய தோற்றம்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம் 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு.